# செந்தமிழ்

பகுதி : 6
தொகுதி : 97
ஜூன் 2003

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2034



வள்ளல் பாண்டித்துரைத்தேவர்

மதுரைத் தமிழ்ச்சங்கம்
THE MADURAI TAMIL SANGAM

ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ.,எம்.ஃபில்.,

பதிப்பாசிரியர் இரா. சதாசிவம் எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை – 1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திரு. மா. சங்கர பாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| திரு. இரா. கண்ணன் | உறுப்பினர் |
| திரு. சோ. இராமகுரு | உறுப்பினர் |

## கல்லூரிக்குழு

| | |
|---|---|
| டாக்டர்.திரு.ந.சேதுராமன், M.S.,MCh.,(URO).,M.N.M.S.(URO).,FICS., | தலைவர் |
| திரு. மா.சங்கரபாண்டியன்,பி.ஏ., பி.எல் | செயலாளர் |
| திரு. இரா.அழகுமலை, எம்.ஏ.,எம்.ஃபில்., | உறுப்பினர் |
| திருமதி. ராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர்.மலையாண்டி (எ) அசோக், பி.எல்., | உறுப்பினர் |
| திரு. எஸ்.பரங்குன்றம், பி.ஏ. | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி, பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. சோ.இராமகுரு | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| டாக்டர் திரு. நா.பாலுசாமி, எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பி.எச்டி., | உறுப்பினர் |
| திருமதி. வாசுகி இராஜா, எம்.எஸ்.சி.,எம்.ஃபில்., | உறுப்பினர் |
| டாக்டர்.திரு. செ.கந்தசாமி, எம்.ஏ.,பிஎச்.டி., | உறுப்பினர் |
| டாக்டர்.திரு. க.சின்னப்பா, எம்.ஏ.,பி.எச்.டி., பல்கலைக்கழக உறுப்பினர் | உறுப்பினர் |

# செந்தமிழ்

பகுதி : 6
தொகுதி : 97
ஜுன் 2003

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2034



வள்ளல் பாண்டித்துரைத்தேவர்

மதுரைத் தமிழ்ச்சங்கம்
THE MADURAI TAMIL SANGAM

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ.,எம்.ஃபில்.,
பதிப்பாசிரியர் இரா. சதாசிவம் எம்.ஏ.,எம்.ஃபில்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை – 1.

# பொருளடக்கம்

1. பாண்டித்துரைத் தேவர் ...191
மறைமலையடிகள் வரலாறு

2. இதழ்மணம் ...192

3. பிரபந்த தீபம் ...193
பேராசிரியர் இரா.சாரங்கபாணி

4. திருவெம்பாவை – 13 ...204
பேராசிரியர் சுப.அண்ணாமலை

5. நவநீதப் பாட்டியல் ...207
சு.சுவாமிஐயா

6. தமிழின் பழமை ...216
பெரும்புலவர் திரு.திருநாராயணய்யங்கார்

7. கவிதை எது? எதற்கு? ...219
ம.ரா.போ.குருசாமி

# பாண்டித்துரைத் தேவர்

இவர் இராமநாதபுரம் அரசர் முத்துராமலிங்க சேதுபதியின் தமையனார் பொன்னுசாமித் தேவரின் திருமகனாராவர். சிறந்த தமிழ்க்காதலர்; புலவர் பாவலர்; உயர்ந்த நாவலர்; செய்யுள் நூல்கள் சிலயாத்தவர்; தமிழ்த்தொண்டே தனக்கின்பமெனக் கண்டவர்; புலவர்களைப்போற்றி அதனால் தமிழ்வளர்த்த வள்ளல். தம்முன்னோர் மதுரையில் வைத்து நடத்திய முதல் - இடை - கடைச் சங்கங்கள் மறைந்ததை எண்ணி எண்ணி வருந்தினார். வருந்தி வாளாகிடக்கவில்லையவர்.

"நான்காம் தமிழ்ச் சங்கம் நாட்டுவேன்; நற்றமிழ்வளர்ப்பேன்" என்று முனைந்தார். எத்தனையோ இடைஞ்சல்கள் குறுக்கிட்டன. எனினும், எண்ணியதை முடித்து நின்றார்.

*"இசையா தெனினும், இயற்றியோ ராற்றால்*
*அசையாது நிற்பதாம் ஆண்மை" (நாலடியார்)*

அன்றோ? அன்றியும் இக்கோமகன், குடியால் மட்டுமன்றித் தோற்றத்தானுங் குணத்தானும், பெயரானும் பாண்டியர் மட்டுமல்ல; பாண்டியர்கட்குத் துரையாம் எனுமாறு விளங்கினர். இதனால், இவர் இயற்பெயர் காரணப் பெயராய்ப் பாண்டித்துரை என்று வழங்கலானது மகிழற்பாலதேயாம். இப்பிரான் தாங்கருதியவாறு 14.9.1901ல் மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கத்தை நிறுவினர்.

*நன்றி*
*மறைமலையடிகள் வரலாறு*

# இதழ்மணம்

பேராசிரியர் இரா.சாரங்கபாணியவர்கள் பிரபந்த தீபம் என்னும் நூல்குறித்து விரிவான திறனாய்வு எழுதியுள்ளார். அதன்கண் பிரபந்தங்களை ஒப்புநோக்கி ஆய்வுரை வழங்கியுள்ளார். பிரபந்தங்கள் குறித்த விரிவான செய்திகளை பேராசிரியருடைய கட்டுரையில் காணமுடியும்.

பேராசிரியர் சுப.அண்ணாமலை அவர்களுடைய திருவெம்பாவை பதின் மூன்றாம் திருப்பாடல் விளக்கம் இவ்விதழில் வெளிவருகிறது. அதன்கண் "சங்கம் சிலம்ப" என்னும் திருவெம்பாவைத் தொடரை யோகநெறி நின்று விளக்கியிருப்பது உளம்கொள்ளத்தக்க உண்மையாகும்.

பேராசிரியர் ம.ரா.போ.குருசாமி அவர்கள் "கவிதை எது? எதற்கு? "கட்டுரையில் கவிதையின் நோக்கும் போக்கும் விரித்துரைக்கப் பட்டுள்ளது. புதுயுகக்கவிஞர் வைரமுத்துவின் கவிதைகள் குறித்துப் பேராசிரியர் அளித்துள்ள திறனாய்வு கவிதையை இனம் காட்டுகிறது. முதுபெரும் பேராசிரியர் ம.ரா.போ. குருசாமி அவர்கள் கவிஞர் வைரமுத்துவின் கவிதையை ஆய்வுசெய்திருப்பது புலவர்கள் குழுவில் அதற்குரிய சிந்தனையை தூண்டுவதாக அமையும்.

பேராசிரியர் சு.சுவாமி ஐயா அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய தமிழ் இலக்கண இலக்கியப் பேரறிஞர். அவர்கள் எழுதிய நவநீதப்பாட்டியல் என்னும் கட்டுரை அந்நூல்பற்றிய தெளிந்த ஆய்வுரையாக அமைந்துள்ளது. இவ்வரிய கட்டுரையை அச்சிடுவதற்குதவிய பேராசிரியர் நா.பாலுசாமி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதழில் வெளிவரும் கட்டுரைகள் குறித்த திறனாய்வுகளை வரவேற்கிறோம். ஆண்டுதோறும் சனவரிமுதல் டிசம்பர் முடிய செந்தமிழில் வெளிவரும் கட்டுரைகள் குறித்த திறனாய்வுக் கட்டுரைகளுக்குப் பரிசு வழங்கப்படும். தமிழகத்தில் உள்ள கல்லூரி மாணவர்கள் செந்தமிழில் வெளிவரும் கட்டுரைகளைத் தொகுத்து திறனாய்வுக்கு எடுத்துக்கொண்டு ஒரு இதழையோ, ஒரு ஆண்டு முழுதும் வரும் இதழையோ ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு கட்டுரை எழுதலாம். சிறந்த முதல் மூன்று கட்டுரைகளுக்குப் பரிசு வழங்கப்படும்.

# பிரபந்த தீபம்

*பேராசிரியர் இரா.சாரங்கபாணி*
*சிதம்பரம்*

'தெரிமாண் தமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்' என்னும் பரிபாடல் திரட்டின் அடியால் பண்டே தமிழ் இயல், இசை, நாடகமென மூன்று வகையினதாக இருந்தமை அறியலாம். அம்மூன்றனுள் ஒன்றாகிய இயற்றமிழின் வளர்ச்சியை அறிய நமக்குத் தொல்காப்பியம் உறுதுணையாக உள்ளது. தொல்காப்பியம் இயற்றமிழை எழுத்து, சொல், பொருள் என மூவதிகாரமாகப் பாகுபடுத்து இலக்கண இலக்கியங்கள் பற்றிய செய்திகளை விரித்துக்கூறும், மூவகையாகக் கருதப்பெற்ற இலக்கணம் காலப்போக்கில் வளரத் தொடங்கியது. யாப்பினை நாலாவது வகையாகவும், அணியை ஐந்தாவதாகவும், பாட்டியலை ஆறாவதாகவும், நிகண்டு முதலியவற்றை ஏழாவதாகவும் பிற்கால அறிஞர் கருதினர். யாப்பு, அணி, பாட்டியல், நிகண்டு அனைத்துக்கும் அடிப்படையாகத் தொல்காப்பியச் செய்யுளியல் விளங்குகிறது.

சங்க காலத்துக்குப்பின் பிரபந்தங்கள் எழுந்தன. புரவலர்களையும் அரசர்களையும் தலைவர்களாக வைத்துச் சில புறத்துறைகளில் புகழ்ந்திருப்பதைப் புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய நூல்கள் உணர்த்தும். பத்துப்பாட்டில் ஆற்றுப்படை நூல்கள் வள்ளல்களைப் புகழ்ந்து பாராட்டும். ஆனிரை கவர்தல், மீட்டல், மதிற்போர், யானைப்போர் முதலிய பற்றிப் பாடல்கள் அமைத்து வீரரை ஏத்தினர். இவற்றைப் பற்றிப் பல பாடல்கள் அமையவே, கையறுநிலை, கண்படைநிலை, துயிலெடை நிலை முதலிய துறைகள் தனியிலக்கியமாகத் தோன்றின. கைக்கிளை, வெட்சி, கரந்தை, உழிஞை முதலிய திணைகள் பற்றியும் தனி இலக்கியங்கள் மலர்ந்தன. நாயன்மார்களும் ஆழ்வார்களும் பின்வந்த அடியார்களும் இரட்டைமணிமாலை அந்தாதி, திரு அங்கமாலை, எழுகூற்றிருக்கை, திருமடல், திருப்பல்லாண்டு, திருப்பாவை, உலா, கோவை முதலிய இலக்கியங்கள் இயற்றினர்.

இந்நிலை கண்டு இலக்கியங்களுக்கு இலக்கணம் அமைக்கும் எண்ணம் எழவே, பாட்டியல்கள் தலையெடுத்தன. பிரபந்த இலக்கணம் கூறுவதே பாட்டியலாகும். பாட்டியல் என்பதில் பாட்டு என்பது ஆகுபெயராய் இலக்கியத்தைக் குறிக்கும். இயல் என்பது இலக்கணத்தைக் குறிக்கும். ஆகவே, இலக்கியங்களின் இலக்கணம் இயம்புவது பாட்டியல் என்பது போதரும். யாப்பு பாவகைகளுக்கும் பாவினங்களுக்கும் இலக்கணம் கூற, பாட்டியல் இலக்கியங்களின் பாடுபொருள், பாடு முறை, பாக்களின் எண்ணிக்கை, பாடப்பெறும் யாப்பு வகை, முதலியன குறித்த இலக்கணம் கூறும். பொதுவாகப் பாட்டியல் முதல் மொழியியல், செய்யுள் மொழியியல், பொது மொழியியல் என மூவகைப்படும். முதலியல் பொருத்தமும், இரண்டாவது இலக்கியங்களின் இலக்கணமும், மூன்றாவது ஒழிபான செய்தியும் கூறும்.

தமிழில் பிரபந்தவகை தொண்ணூற்றாறு என்பது பலரது கருத்தாகும். பிரபந்தம் என்பது வடசொல். செம்மையாக யாக்கப்பெற்றது என்பது அதன்பொருள். பிரபந்தத்தைச் சிற்றிலக்கியம் என அழைக்கும் வழக்காறு காணப்படுகிறது. பிரபந்தம் பெருங்காப்பியம், காப்பியம் முதலியவற்றுக்கும் இலக்கணம் கூறுதலான் சிற்றிலக்கியம் எனும் ஆட்சி பொருந்தாது எனத் திரு மு.அருணாசலம் மொழிவர் (பிரபந்தமரபியல் பக்.6) எனவே, இலக்கியம் என்னும் ஆட்சியே பொருந்துவதாகும். இவ்விலக்கியங்களைத் தொல்காப்பியர் கூறும் 'விருந்து' என்பதில் பேராசிரியர் அடக்குவர் (தொல் - செய்யுளியல் 237).

பிரபந்தம் 96 வகை என முதலிற் குறிப்பிட்டவர் படிக்காசுப் புலவர் என்று கூறித் 'தொண்ணூற்றாறு கோலப் பிரபந்தங்கள் கொண்ட பிரான்' என்று அப்புலவர் தம்மைப் புரந்த சிவந்தெழுந்த பல்லவராயனைக் குறிப்பிட்டுள்ளதைச் சான்றாகக் காட்டியுள்ளார். உ.வே.சா. ஆகவே பிரபந்தம் 96 வகை என்னும் வழக்கு 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலுள்ளமை அறியலாம். அதற்கு முன்னரே அவ்வழக்கு இருந்ததை 16 ஆம் நூற்றாண்டு எனக் கருதப்பெறும் *பிரபந்த மரபியல்* சுட்டுகிறது.

பிள்ளைக் கனிமுதல் புராணம் ஈறாகத்
தொண்ணூற் றாறெனும் தொகைய தான
முற்பகர் இயல்பு முன்னுறக் கிளக்கும்
பிரபந்த மரபியல்

இவ்வெண்ணிக்கையைச் சதுரகராதி. நிகண்டுகளும் குறிக்கின்றன. எனினும் 96 வகை எனக்கூறுவது பொருத்தமாகப் படவில்லை.

பிரபந்த இலக்கணம் கூறும் நூல்கள் இலக்கிய எண்ணிக்கையில் வேறுபடுகின்றன. பன்னிரு பாட்டியல் 61, வெண்பாப் பாட்டியல் 53, நவநீதப் பாட்டியல் 45, பிரபந்த மரபியல் 63, சிதம்பரப் பாட்டியல் 53, இலக்கண விளக்கப்பாட்டியல் 64, தொன்னூல் விளக்கம் உரைப்பகுதியுடன் 91, முத்து வீரியம் 90, பிரபந்த தீபிகை 77, சுவாமி நாதம் 37, பிரபந்ததீபம் 97, இலக்கியங்களுக்கு இலக்கணம் கூறுகின்றன.

பிரபந்த இலக்கணம் கூறும் நூல்கள் மொத்தம் 14. அவை தரும் நூல்களின் எண்ணிக்கை மொத்தம் 203 என டாக்டர் ச.வே.சுப்பிரமணியன் தம் பிரபந்த தீபப் பதிப்பின் இறுதியில் பட்டியல்களின் வழியே காட்டியுள்ளார். மேலும் பாட்டியலில் கூறப் பெறாத வாய்மொழியிலக்கியங்கள் எத்துணையோ உள்ளன. அவையெல்லாம் இப்பொழுது ஆய்வு செய்யப்பெற்று நூல் வடிவில் வெளிவருகின்றன. தாலாட்டு, ஏற்றப்பாட்டு, ஒப்பாரி முதலியனவும் இலக்கிய வகையாகக் கொள்ளற்குரியன. அண்டகோசம், ஆடாமணி, ஆழ்கடல், இலக்குமி விலாசம், களவு கண்ணி, கண்ணிமயக்கம், காமரசமாலை, கானவேட்டம், சிந்து மோகினி, சிலேடா சாகரம், தள சிங்காரம், தாமரை நோன்பு, துனி விசித்திரம், பண்ணை விசித்திரம் புறநாட்டுச் செய்கை, மதன சிங்காரம், வதன சந்திரோதயம், விசயவித்தாரம், வேடர் விநோதம் போன்ற நூல்கள் பாட்டியல் நூல்களில் இடம் பெறாத இலக்கியங்கள் என இலக்கண வரலாறு - பாட்டியல் (ப.62) என்னும் தம் நூலில் மருதூர் ச.அரங்கராசன் குறித்துள்ளார். கீர்த்தனை, சிந்து, தெம்மாங்கு, விற்பாட்டு, வரிப்பாட்டு முதலிய இசைவகைப் பாடல்கொண்ட இலக்கியங்களும் பிரபந்த வகையில் சேர்க்க வேண்டியவையாகும். 14 பாட்டியல் தரும்

இலக்கியங்களைத் தொகுத்தெண்ணின் 203 வரும். பாட்டியல் கூறாத இலக்கிய வகைகள் அனைத்தையும் தொகுத்து வகுத்து ஆராய்ந்த திரு.மு.சண்முகம்பிள்ளை 367 பிரபந்தங்களைச் சுட்டுவர். (தமிழிலக்கியக் கொள்கை - தொகுதி 2 - சிறு பிரபந்தங்கள் பக்.123-127)

பாட்டியலிற் குறிக்கப் பெற்றும் இலக்கியம் பெறாமல் சில காணப்பெறுகின்றன. அவை சாதகம், பல்சந்தமாலை, ஒலியந்தாதி, யானைத் தொழில், தசப்பிராதுற்பவம், ஊரின்னிசை, தாரகை மாலை முதலியன.

பாட்டியல்களுள் காலத்தால் முந்தியது பன்னிரு பாட்டியலாகும் (கி.பி.10) அது 61 வகை பிரபந்தங்களைக் கூறுகிறது. ஆனால் கி.பி.12இல் எழுந்த வெண்பாப்பாட்டியல் 53 வகைகளையும் கி.பி.14இல் தோன்றிய நவநீதப் பாட்டியல் 45 வகைகளையும் குறிப்பிடும். காலப்போக்கில் இலக்கியங்கள் மிகுதல் இயல்பு. அங்ஙனமாக, பின் தோன்றிய பாட்டியல்கள் மிகுதியான பிரபந்தங்களுக்கு இலக்கணம் கூறாதது ஏன் என நோக்குங்காலை, தம் காலத்து வழக்குள்ள இலக்கியங்களை மட்டும் கூற வழக்கிழந்தவற்றை விட்டிருக்கலாமா என எண்ணத் தோன்றுகிறது. பன்னிருபாட்டியல் பலர்தம் பாக்கள் தொகுப்பாதலின் எண்ணிக்கை மிகுந்திருக்கலாம். பன்னிருபாட்டியல் இலக்கணம் கூறும் சில பிரபந்தங்களுக்குச் சான்றாக நூல்கள் கிடைத்தில. அதனால் வருங்காலத்தில் புதுப்படைப்புகள் தோன்றுவதற்கு வாய்ப்பாகச் சிலவற்றுக்கு இலக்கணம் கூறியிருக்கலாம் என அறிஞர் சிலர் கருதுகின்றனர்.

அகத்தியர், தொல்காப்பியர், அவிநயர், கோவூர்கிழார், பெருங்குன்றூர் கிழார், மாபூதனார் முதலியோர் பெயரால் பாட்டியல் குறித்த தனிநூற்பாக்கள் சில காணப்படுகின்றன. அவை அப்பெயர்கள் தாங்கிய பிற்காலத்து வாழ்ந்தோரால் இயற்றப்பெற்றவை எனக் கருதுதல் வேண்டும். செய்யுள் வகைமை, திணை நூல், தூக்கியல், பாட்டியல் மரபு, மாமூலர் பாடிய மாமூலம், முள்ளியோர் கலித்தொகை முதலிய பாட்டியல் நூல்கள் மறைந்தன என உரையாசிரியர் குறிப்பு அறிவிக்கும்.

பாட்டியல்கள் மட்டும் கூறாது ஐவகை இலக்கணம் கூறும் இலக்கண விளக்கம், முத்து வீரியம், சுவாமிநாதம் போன்றவையும் பிரபந்த இலக்கணம் நுவல்கின்றன. அக்காலத்திருந்த அவ்விலக்கியங்களின் செல்வாக்கே அந்நூல்கள் பிரபந்த இலக்கணம் கூறக்காரணமாகும். அதனாலேதான் திவாகர நிகண்டு பிங்கல நிகண்டு முதலியனவும் பிரபந்தச் செய்திகளைத் தருகின்றன.

பிரபந்தங்களின் பெயர்கள் பாடு பொருள், யாப்பு, எழுத்து, பாடலின் தொகை, ஓசை, திணைதுறைப் பெயர்கள் அமைப்பு முதலிய அடிப்படையில் அமைந்துள. 96 இலக்கிய வகைகளைத் தொல்காப்பியப் புறத்துறைகளைச் சார்ந்தவை 28; அகத்துறைகளைச் சார்ந்தவை6; சங்க இலக்கியங்கள் ஆகியவற்றில் காணப்பெறும் இலக்கியப் பகுதிகள் பொருட்கூறுகள் ஆகியவற்றைச் சார்ந்தவை 33; அகமும் புறமும் விரவி அமைந்தவை 2; கவிஞரின் கற்பனைப் பெருக்கால் எழுந்தவை 15; அந்தாதிப் பிரிவுகளாக அமைந்தவை 4; பொது இலக்கிய வகையைச் சார்ந்தவை 6; யாப்பமைதி உடையவை 2 எனச் 'சிற்றிலக்கியச் செல்வத்தில்' (பக்.25) டாக்டர் ந.வீ.செயராமன் பகுத்துக் காட்டுவர்.

பிரபந்த தீபம் கூறும் 97 வகைப் பிரபந்தங்களைக் கீழ்க்கண்டவாறு பாகுபாடு செய்யலாம். அகத்திணை பற்றியவை அகப்பொருட்கோவை, அநுராகமாலை உலாமடல், உலா, ஐந்திணைச் செய்யுள், கைக்கிளை, பவனிக்காதல், குறத்திப் பாட்டு, ஆக.8 புறத்திணை பற்றியவை அங்கமாலை, அட்டமங்கலம், அரசன் விருத்தம், ஆற்றுப்படை, இயன்மொழி வாழ்த்து, உற்பவ மாலை, உழிஞை மாலை, ஊரின்னிசை. ஊர்வெண்பா, ஊர் நேரிசை, ஊசல், எழுகூற்றிருக்கை, எண் செய்யுள், நாமமாலை, புகழ்ச்சிமாலை, பெருமகிழ்ச்சிமாலை, மெய்க்கீர்த்திமாலை, காப்பு மாலை, வேனில் மாலை, வீர வெட்சிமாலை, நொச்சிமாலை, தும்பைமாலை, வாகைமாலை, தோரண மஞ்சரி, சின்னப்பூ, விருத்தம், முதுகாஞ்சி, பெருமங்கலம், கண்படை நிலை, துயிலெடைநிலை, வசந்தமாலை, தாரகை மாலை, தானை மாலை, தண்டக மாலை,

விளக்குநிலை, புறநிலை, கடைநிலை, கையறுநிலை, தசாங்கப்பத்து தசாங்கத் தயல், நயனப்பத்து, பயோதரப்பத்து, பாதாதிகேசம், கேசாதி பாதம், மங்கள வெள்ளை, தூது, குழமகன், புறநிலை வாழ்த்து, வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ, சாதகம், பிள்ளைக்கவி, சீட்டுக்கவி, சமுத்தி என 58. யாப்புப் பற்றியவை அலங்கார பஞ்சகம், இரட்டைமணிமாலை, இணைமணி மாலை, இருபா இருபது, *ஊரின்னிசை, ஊர் நேரிசை, வருக்கக்கோவை,* மும்மணிக்கோவை, நவமணிமாலை, நான்மணிமாலை, பல்சந்தமாலை, தண்டமாலை, தாண்டகம், பன்மணிமாலை, மணிமாலை, வருக்கமாலை, மும்மணிமாலை, கல்தொகை, நெடுந்தொகை, குறுந்தொகை, ஒருபா ஒருபது, பெயரின்னிசை, பேர் நேரிசை, கடிகை வெண்பா என 24. எண் பற்றியவை இருபா இருபது, பதிற்றந்தாதி, நூற்றந்தாதி, ஒருபா ஒருபது, தசாங்கப்பத்து, நயனப் பத்து, பயோதரப் பத்து, நாற்பது, பதிகம், சதம் ஆக 10. அந்தாதி பற்றியன பதிற்றந்தாதி, நூற்றந்தாதி, ஒலியந்தாதி என 3. எழுத்துப்பற்றியன வருக்கக்கோவை, வருக்கமாலை, தாண்டகம் என3. சதகம், காப்பியம், கலம்பகம் ஆகியவை அகமும் புறமும் பற்றியவையாகும். திணை பற்றியவை உழிஞை மாலை, வீரவெட்சிமாலை, வெற்றிக் கரந்தை மஞ்சரி, வரலாற்று வஞ்சி, செருக்கள வஞ்சி, போர்க்கெழு வஞ்சி, காஞ்சிமாலை, நொச்சிமாலை, தும்பை மாலை, வாகைமாலை, கைக்கிளை என 11. துறை பற்றியவை ஆற்றுப்படை, இயன்மொழி வாழ்த்து, கண்படைநிலை, துயிலெடைநிலை, விளக்குநிலை, புறநிலை, கடைநிலை, கையறுநிலை, மங்களவள்ளை, புறநிலை வாழ்த்து, வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ, முதுகாஞ்சி, பெருமங்கலம் என 14.

பிரபந்த தீபத்தின் ஆசிரியர் பெயர், அவர்தம் வரலாறு முதலியன தெரியவில்லை. நூலின் முதற்பகுதியான சிறப்புப் பாயிரம், கடவுள் வாழ்த்து ஆகியவை கிடைத்திருப்பின் அவை பற்றி அறிய வாய்ப்பிருந்திருக்கும். முனைவர் உ.வே.சா. நூலகத்திலிருந்து ஓலைச் சுவடிகளைப் பெற்று 1980இல் முனைவர்.ச.வே.சுப்பிரமணியன் தூத்துக்குடியில் நடைபெற்ற பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றக் கருத்தரங்கின்போது

வெளியிட்டார். பிரபந்தங்களைப் பற்றிய விளக்கம் எனும் நூலின் பெயர் ஒப்பு நோக்கத் தகும். நாமதீப நிகண்டு, பாரதி தீப நிகண்டு எனச்சில நிகண்டுகள் தீபம் எனும் சொல்லுடன் வழங்குகின்றன. 'முத்துவீரியத்தின் தொடர்களை அவ்வாறே எடுத்தண்டிருப்பதால் இது அந்நூலுக்குப்பின் தோன்றியிருக்கலாம்; சான்றாக ஊசல். தூதுவைக் காண்க' எனத் தம் பதிப்பு முகவுரையில் முனைவர் ச.வே.சு. குறித்துள்ளார். 9 நூற்பாக்களைக் கொண்டிலங்குவது இந்நூல். இதன்கண் முதலும் முடிபும் பற்றிய விளக்கமில்லை. ஏட்டுப்படியில் நூல் அகப்பொருட்கோவையுடன் நூற்பா ஒன்று என்னும் எண்ணுடன் தொடங்குகிறது. காப்புச்செய்யுள், நோக்கம், உட்பொருள் போன்றவை நூலாசிரியரால் பாடப்பட வில்லையா, விடுபட்டுள்ளனவா என அறியவியலவில்லை எனப் பதிப்பாசிரியர் குறித்துள்ளார். சமுத்திக்கு இறுதி நூற்பா விளக்கமளிக்கிறது. நூலின் முடிவிற்கான குறிப்பில்லை. கையெழுத்துப் படியில் இந்நூல் அபூர்த்தி என்றுள்ளது. பாட்டியல்கள் சிறப்பாகக் கூறும் பரணிக்கு இந்நூல் விளக்கம் கூறவில்லை. ஆதலின் பிற்பகுதியில் இடம் பெற்றிருக்குமோ? ஆசிரியர் தம் காலத்துச் செல்வாக்கிழந்தமையால் பாடாது விடுத்திருப்பாரோ? என்று ஐயம் எழுகின்றது.

சதுரகராதி குறிப்பிட்டுள்ள 96 வகைப் பிரபந்தங்களில் பரணி, உழத்திப்பாட்டு ஆகிய இரண்டையும் விடுத்துச் சீட்டுக்கவி, சமுத்தி என்ற இரண்டையும் தீபம் சேர்த்துள்ளது. பிற பாட்டியல்கள் சாதகத்தையோ பிள்ளைக் கவியையோ முற்கூறித்தான் தம் நூலைத் தொடங்கும். ஆனால், தீபமோ அகப்பொருட் கோவையை முற்கூறுகிறது. காரணம் அகர வரிசைப்படி நூலமைப்பு இருப்பதுதான். இப்போக்கு நூல் முழுவதும் கடைபிடிக்கப் பெறாமல் இடையிலே தடைப்பட்டு நின்று விடுகிறது. இலக்கியத்தின் பெயர் நூற்பாவின் முதலிலே இடம் பெறுமாறு நூலாசிரியர் அமைத்துள்ளார். 'அகப்பொருட் கோவை அறையுங்காலை' 'உலாமடல் என்பது உரைத்திடில்' என்ற போக்கில் நூற்பாக்கள் செல்கின்றன. விதி விலக்காகச் சமுத்தி பற்றிய நூற்பாவில் மட்டும் நூலின் பெயர் முதலில் வரவில்லை. இப்பாட்டியல் மட்டும் சீட்டுக்கவி, சமுத்தி என்னும் இரு

இலக்கியங்கட்கு விளக்கம் கூறியிருப்பது தனிச்சிறப்பாகும். தெய்வ வணக்கம், தேசிகன் வணக்கம், பாடுவோர் புகழ்ச்சி, பாடப்பெறும் தலைவனின் புகழ்ச்சி ஆகியவை அமைய ஆசிரிய விருத்தத்தால் பாடுவது சீட்டுக்கவி என 96 ஆம் நூற்பாவிளக்கும். சொன்ன எழுத்தால் சொன்ன சொல்லால் தொடங்கி அகப் பொருளதாயினும் புறப்பொருளதாயினும் யாப்புக் குறைவின்றிப் பாடி முடித்தல் சமுத்தி என்று இறுதியிலுள்ள 96ஆம் நூற்பா இலக்கணம் கூறும். நூற்பாக்களின் சிற்றெல்லை ஓரடியாகவும், பேரெல்லை 28 அடியாகவும் உள்ளன. 'வேனில்மாலை இருவேனிலைப் பாடலே' என ஓரடியிலேயே வேனில் மாலையின் இலக்கணம் கூறுகிறது. குறத்திப்பாட்டின் இலக்கணம் 28 அடிகளில் விரிவாகப் பேசப்படுகிறது. (நூற்பா 92.)

பிறபாட்டியல் நூல்கள் பெருங்காப்பியம், சிறுகாப்பியம் எனப்பகுத்துக் கூறுவதைத் தீபம் காப்பியமென ஒன்றாகவே கூறும். தொகைச் செய்யுள் என்பதைக் கலித்தொகை, நெடுந்தொகை, குறுந்தொகை என மூன்றாகப் பகுத்துக் கலியடிச் செய்யுளின் தொகுப்பு கலித்தொகை என்றும் நெடிலடிச் செய்யுளின் தொகுப்பு நெடுந்தொகையென்றும் குறளடிச் செய்யுளின் தொகுப்பு குறுந்தொகை என்றும் இந்நூல் விளக்கும். உலாமடலும் உலாவும் வேறுபாடு தோன்ற விளக்கப் பெறுகின்றன. உலாமடல் என்பது தலைவன் கனவில் கண்டு இன்புற்ற மங்கை பொருட்டு மடலூர்வன் எனக் கூறுவதாகக் கலிவெண்பாவால் பாடுவது. உலா என்பது மகளிர் தலைவனைப் பணியும் வகையில் குலம், குடி, பிறப்பு, குலம், அழகு முதலியவற்றைக்கூறி அவன் உலாவருமாறு கலிவெண்பாவால் இயற்றுவது. சிறு வேறுபாடுள்ள இலக்கிய வகைகளும் குறிக்கப்பட்டுள. ஊரின்னிசை என்பது தலைவன் ஊரினைச் சிறப்பித்து இன்னிசை வெண்பாவால் பாடுவது. தலைவன் ஊரை நேரிசை வெண்பாவால் 90,70,50, என்னும் எண்ணிக்கையில் பாடுவது ஊர்நேரிசை. ஊரின்னிசைக்கு எண்ணிக்கை கூறவில்லை.

சில இலக்கியங்களுக்கு முரணான விளக்கம் காணப்படுகிறது. ஒரு பாவின் வகையினால் பத்துப்பாட்டு பாடுவது ஒருபா ஒருபது என்பது காரணப்பெயராகும். ஆனால் தீபமோ,

ஒருபா ஒருபஃது உரைக்கில் அகவல்
கலித்துறை வெண்பா கலந்துபத் தியம்பலே (59)

என மூன்றுபாடல் விரவிப் பாடலாம் என்று இலக்கணம் கூறுவது முரணாக உள்ளன. ஒரு பொருள் பற்றிப் பத்துப் பாடல் பாடுவதே பதிகம் எனப் பிற பாட்டியல்கள் கூறத் தீபம்,

பதிகம் என்பதுவே பலபொருள் பற்றி
பத்துப் பாட்டால் பாடல் பான்மையே (80)

என்று நுவலும். இது புதுமையாகும்.

ஊசல், குறத்திப்பாட்டு ஆகியவற்றின் இலக்கணம் விரிவாகப் பேசப்படும். ஊசல் எழு கூற்றிருக்கை, முதுகாஞ்சி முதலியவற்றுக்கு முத்து வீரியத்தைப் பின்பற்றி இலக்கணம் கூறுகிறது. சதுரகராதியின் விளக்கத் தொடர்களை அநுராகமாலை, அங்கமாலை, நவமணிமாலை முதலியவற்றில் எடுத்தாள்கிறது.

முன்னய நூல்களுக்கு முரணாகத் தீபம் சில நூற்பாக்களை அமைத்துள்ளது.

அட்ட மங்கலமே ஆதிக் கடவுளை
ஆசிரிய விருத்தம் எட்டு அந்தாதித் துரைத்தலே (8)

என்பது தீப நூற்பா. கவரி, நிறைகுடம், கண்ணாடி, தோட்டி, முரசு, விளக்கு, பதாகை, இணைக்கயல் என்னும் அட்டமங்கலப் பொருளைத் தீபம் குறித்திலது.

பன்னிருபாட்டியல் பாட்டுடைத் தலைவனைக் காக்குமாறு இறைவனை ஏத்தியுரைத்தல் என்று விளக்கந்தரும். இணைமணி மாலைக்குப் பன்னிருபாட்டியல் முதலிய பிற நூல்கள் 100 பாடல் என்று கூறத் தீபம் 200 பாடல் என்னும், பரிசில் பெறாத இரவலன் புரவலனிடம் வெறுத்து அவன் வாயிடத்து மொழிவது கடைநிலை என்பது பன்னிருபாடல் அளிக்கும் செய்தி, வாயிற் காவலனிடம் 'என் வரவினை உன் இறைவனுக்குக் கூறுக' என்று பரிசிலன் உரைப்பது கடைநிலை என்று முத்து வீரியம்தரும் விளக்கம். ஆனால், தீபம் கடை காப்பாளர் சேய்மையில் வரும் திண் தேர் வேந்தரைக் கண்டு அன்பொடு தன் அரசனுக்குக்

கூறுதல்போல அமைத்தல் கடைநிலை என்று கூறும். இது 'சேய்வரல் வருத்தம் வீட வாயில் காவலர்க்குரைத்த கடைநிலை' (புறத்திணையியல், 35) என்னும் தொல்காப்பியக் கருத்துக்கு முரணாகும். பாசறையில் வெற்றி உறுதி என்னும் நினைவில் கவலையற்றுத் துயிலும் அரசர்க்குப் புகழைத் தரும் செய்தி கூறுந் தூதர் துயிலெழுப்புதலைத் தீபிகை துயிலெடை நிலைக்கு விளக்கமாகக் கூறும். ஆனால் தீபமோ, பாசறையில் வயவரை வென்று மகிழ்ந்துறங்குவதைச் சூதர் புகழ்ந்து பாடும் பாட்டால் எழுப்புவது என்று விளக்கந்தரும். இது 'தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச் சூதர் ஏத்திய துயிலெடை நிலை' (புறத்திணையியல், 36) என்னும் தொல்காப்பியக் கருத்தோடு இயைவதாகும்.

செய்யுளில் ஓரடிக்கு 27 எழுத்து அமையப் பாடுதல் அளவியல் தாண்டகம் என்றும் ஓரெழுத்துக் குறையின் அளவழித் தாண்டகம் என்றும் தீபம் கூறும். ஆனால் பன்னிரு பாட்டியல் அடிதோறும் அறுசீர் வருவது குறுந்தாண்டகம் என்றும் எண்சீர் வருவது நெடுந்தாண்டகம் என்றும் ஆடவரையும் இறைவரையும் புகழ்ந்துரைத்தல் இப்பாடலில் பொருண்மை என்றும் பன்னிரு பாட்டியல் சுட்டும். சின்னப் பூவிற்கு 100 பாடல் எனத்தீபம் கூற, பிற 100, 90, 70, 50எனப் பலவாறாக எண்ணிக்கை தரும்.

பாட்டியலின் முதற்பகுதி பல்வகைப் பொருத்தம் பார்ப்பது. அவ்வியல், சாதிப் பாகுபாடு எழுத்திலும் பாவிலும் புகுந்து நிற்பதைத் தெளிவாகக்காட்டுவது. அந்தணர் அரசர் முதலியோர்க்கு உரிய எழுத்துக்கள் இவை, பாக்கள் இவை, என்பதை அவ்வியல் உணர்த்தும். வெண்பாவை அந்தணர் பா என்றும் அகவற்பாவை அரசர் பா என்றும் வழங்குதல் பாட்டியல்களின் இயல்பு. முன்னைய பாட்டியல்கள் கூறும் பொருத்தம் பார்க்கும் பகுதி காலத்துக் கொவ்வாது என்று கருதிப் பிரபந்த தீப ஆசிரியர் பொருத்தப் பகுதியைத் தம் நூலில் அமைக்கவில்லை. நேரே இலக்கிய வகைகளுக்கு இலக்கணம் கூறத் தொடங்குகிறார். இந்நூல் அபூர்த்தி என்றிருப்பதால் இப்பகுதி விடுபட்டிருக்குமோ என ஐயுறத் தேவையில்லை.

பிற்பகுதிதான் விடுபட்டிருக்கலாம். அகர வரிசையில் நூல் தொடங்குதலின் முற்பகுதியைவிட வாய்ப்பில்லை. பாயிரம் முதலிய பகுதி வேண்டுமாயின் விடுபட்டதாகக் கருத வாய்ப்புண்டு. சாதியையும் சில வேண்டாப் பழக்கங்களையும் புகுத்திப் பாடும் பொருத்தங்கூறும் பகுதியைப் பாடாமையானும் வெண்பா அகவற்பா என்று வழங்குமிடத்துப் பிற பாட்டியல்கள் போல அந்தணர் பா, அரசர் பா என யாண்டும் சுட்டாமையாலும் இந்நூலாசிரியர் வேண்டாதவற்றை விடுத்துத் தேவையானவற்றை மேற்கொண்டு காலத்துக்கேற்ப நூல் படைத்த சீர்திருத்தப் போக்குடையவர் என்று கருதலாம்.

காலப்போக்கில் இலக்கியத்தின் பாடுபொருள், பாடுமுறை, யாப்புமுறை முதலியன மாறிப் பெருகுதல் இயல்பு. அவற்றின் பெருக்கத்திற்கேற்ப நாளடைவில் இலக்கண நூல்களும் பல்க வேண்டும். 96 வகை எனக் கூறிய பிரபந்தத் தொகை இப்பொழுது மும்மடங்குக்கு மேல் வளர்ந்துள்ளது. மேலும் வளரும். திரைப்படப் பாடல்களும் புதுக் கவிதைகளும் அத்தொகையில் இடம் பெறக்கூடும்.

எல்லாவற்றையும் சேர்த்துத் தொகை வகைப்படுத்தி இலக்கணம் கூறுதல் காலத்துக்கேற்ற தமிழ் வளர்ச்சியாகும். செந்தொடைக்கு இலக்கணம் கூறியது போன்றேனும் புதுக்கவிதைகளுக்கு இலக்கணம் கூறி இலக்கிய வகையுள் அடக்கி மொழிவளங் காப்போமாக.

# திருவெம்பாவை 13

*பேராசிரியர் சுப.அண்ணாமலை*

பாவை நோன்பிருக்கும் மகளிர், நீராடுவதற்காகப் பொய்கையை அடைகின்றனர். பொய்கையில் பூத்திருக்கும் குவளை மலர்க்காடு கருவண்ணமாய்த்திகழ, அதன் அருகே, தாமரைக்காடு செவ்வொளி பரப்பியதைக் கண்டதும், அவர்களுள் ஒரு பெண்ணுக்கு அம்மையப்பரின் தரிசனம் கிடைக்கிறது. அம்பிகை கருநிறம்; ஆண்டவன் செந்நிறம். இயற்கையையும் இறைக்காட்சியையும் பலவகையிலும் ஒப்புமைப்படுத்திப் பாடத் தொடங்குகின்றார்.

"பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கும் மடு"

குவளைப்பூ மாலையில் மலர்வது; தாமரையோ காலையில் மலர்வது. மகளிர் வந்த நேரம் புலர்ந்தும் புலராத அதிகாலை. ஆதலின், குவளைகள் மலராகவே இருந்தன; தாமரைகளோ, நன்கு விரியாத போதாக இருந்தன.

ஆகாய வீதியில், எட்டாத உயரத்தில் தவழும் மேகம், மழையாய்ப் பொழிந்து, நாம் திளைத்து விளையாடும் தண்ணீராய்க் கிடைத்ததைப்போல், அப்பாலுக்கு அப்பாலாகிய சத்தியும் சிவமும், அன்பரின் உயிராகிய பொங்கும் பொய்கையில், பொழிபேரருளாய்க் கிடைத்தது.

இப்படி, தோற்றத்தாலும், பயனாலும் சத்தி சிவத்தை ஒத்திருந்த பொய்கை, தன் பக்கத்தில் உள்ள பொருள்களாலும், உயிரினங்களாலும், ஆரவாரத்தாலும், மக்கள் கூட்டத்தாலும் கூட, சத்தி சிவத்தை ஒத்திருக்கிறது.

பொய்கையில் தண்பதத்தை நாடிவந்த வெண்குருகுப் பறவைகள் ஒருபுறம்; மரங்களில் ஒலியெழுப்பிக் கொண்டிருக்கும் மற்ற பறவைகள் ஒருபுறம்.

"அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்"

குருகு என்பது வளையல் என்றும் பொருள்படும். ஆகவே, கைவளை அணிந்த கவின்மிகும் அம்பிகை ஒப்புமை ஆகின்றாள். அரவம் என்பது ஆரவாரம் மட்டும் அன்று; பாம்பு என்றும் பொருள்படும். எனவே, சடைமுடி முதல் திருவடி வரை பாம்புகளை அணிந்து, அவை பின்னி நெளிந்து கொண்டிருக்கும் திருமேனியை உடைய சிவபெருமான் ஒப்புமை ஆகின்றான்.

காதல் அனுபவமும் இவ்வடிகளில் குறிப்பாகப் புலப்படுகின்றது. சதாசிவனின் திருமேனி அழகைக்கண்டு, கசிந்துருகி நிற்கிறது மகளிர் கூட்டம்.

"அங்கங்கு உருகு இனத்தால்"

இப்படி மனம் உருகி நிற்கும் மகளிர், ஒன்றுடன் ஒன்று பின்னிக்கிடக்கும் பாம்புகள் போலே, சதாசிவனுடன் கலந்து, அனுபவம் பெற விரும்புகின்றனர். இத்தன்மையாலும் பொய்கை, சத்திசிவத்தை ஒத்திருக்கின்றது.

உடலழுக்கு நீங்கப் பொய்கையில் நீராட வந்துள்ளவர் பலர். அதுபோல, ஆணவ மலத்தை நீக்க விரும்பிச் சத்தி சிவத்தைச்சார்ந்து நிற்பவர் உண்டு.

"தங்கள் மலம் கழுவுவார் வந்து சார்தலினால்"

இவ்வளவு காரணங்களினாலும் எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்று, விளங்கிய பொய்கையில், மகளிர் பாய்ந்து பாய்ந்து நீராடுகின்றனர். அவர்களின் கைவளையல்கள் கலகலவென்று ஒலிக்க, பாதச்சிலம்பு, அதனோடு கலந்து ஒலிக்கின்றது. உடல் எல்லாம், உள்ளத்தின் மகிழ்ச்சியால் பொங்கிப் பூரிக்கின்றது. அவர்கள் பாய்ந்தாடுவதால் பொய்கையும் அலைகள் எழுப்பி ஆரவாரம் செய்கிறது.

"பொங்கும் மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்ப, சிலம்பு கலந்தார்ப்ப
கொங்கைகள் பொங்க, குடையும் புனல் பொங்க"

மணிவாசகர் நாயகி, இறைவனிடம் பெற்ற அருளின்ப அனுபவத்தை, இவ்வாறு அடையாளங்களால் கூறுகின்றார். ஆம். நேராகக் கூறுவதற்குச் சொற்கள் இல்லை.

ஆனால் அருளனுபவத்தின் விளைவுகள் சிலவற்றை, இவ்வடிகளால் அறியலாம். சங்கம் என்பது வளையலை மட்டுமின்றி, ஊதும் சங்கையும் குறிக்கும். சங்கு போன்ற வடிவம் உடைய கழுத்தின் உட்புறத்தில், தொண்டைக்குழியில், இறையனுபவத்தின் விளைவாகத் தானாக ஓர் ஒலி எழும். சங்கின் உள்ளே 'ஓம்' என்ற ஒலி தானாக எழுவதைக் கேட்கலாம். இதனையே 'நம் சங்கம் சிலம்ப' என்றார். 'சிலம்பு கலந்தொலிப்ப' என்பது, நாததத்துவம் கடந்த பரவெளியில் துரிய நிலையில் பரநாத ஒலியாகும். இதனை, வள்ளலார்,

"பரநாத முரசு முழங்கியதே"

என்று பாடுகின்றார்.

மணிவாசகரது இருதய கமலம், அருளின்பத்தால், பொங்கித் ததும்பி மலர்ந்து நின்றது. இதனைக் 'கொங்கைகள் பொங்க' என்றார். அவரது அனுபவத்தையும் தாண்டிச் சிவானந்தம் எல்லையற்று விளங்குவதைக் 'குடையும் புனல் பொங்க' என்று குறிப்பிட்டார். காதலியர் அனுபவிக்கும் தோறும், முன் அறியாத அனுபவமாய் உள்ள சிவபிரானைப் பேராது, ஒழியாது அனுபவித்துக் கொண்டே இருக்கும் பெருவாழ்வைப் '*பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோரெம்பாவாய்*' என்று, முன்னர் 'செங்கமலப் பைம் போதால்' என்று கூறியதை நினைவுபடுத்தியவாறு வேண்டுகின்றார்.

# நவநீதப் பாட்டியல்

*சு.சுவாமிஐயா*

நவநீதப் பாட்டியல் நவநீதநடன் என்பவரால் இயற்றப்பட்டது. இவர் நூல் செய்த காலத்தில் இதனைக் 'கலித்துறைப்பாட்டியல்' என்னும் பெயரால் அமைத்திருக்கவேண்டும். ஏனெனில் இந்நூல் முடிவில் 'நவநீத நடனார் அருளிச் செய்த கலித்துறைப் பாட்டியல் முற்றும்' என்னும் தொடர் காணப்படுகிறது. இந்நூலில் நூற்பாக்கள் கட்டளைக் கலித்துறையால் அமைந்தவை. தமிழில் கட்டளைக் கலித்துறையால் இலக்கண நூல் செய்யும் வழக்கினை அமிதசாகரரே முதன் முதலில் எற்படுத்தினார் என்பதனை, "இந்நூல் யாவராற் செய்யப்பெற்றதோ எனின் ஆரியம் என்னும் பாரிரும் பௌவத்தைக் காரிகையாக்கித் தமிழ்ப்படுத்திய அருந்தவத்துப் பெருந்தன்மை அமிதசாகரர் என்னும் ஆரியராற் செய்யப்பெற்றது"[1] என்னும் பகுதியால் உணரலாம். அதன்பின்னர் வீரசோழியம், களவியற்காரிகை போன்ற நூல்களும் கட்டளைக் கலித்துறையால் செய்யப்பெற்றவையே.

## நூலாசிரியர்:

நவநீதன் நவநீதநடன் என்னும் பெயரால் அழைக்கப்பெறும் இவ்வாசிரியர் ஆடலாசிரியராக இருந்திருக்கலாம் எனக் கருதலாம். 'சிறப்புப் பாயிரத்திற் காணப்படும் 'வேதத்தவன்' என்ற சொல் இவர் அந்தணராவர் என்பதனைக் காட்டும்' என டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலைய வெளியீட்டு நூலாசிரியர் வரலாற்று முன்னுரையில் கூறப்பெற்றுள்ளது. சிறப்புப் பாயிரத்திற் காணப்பெறும் 'நாட்டிய வேதத்தவன்'[2] என்னும் தொடர் நாட்டிய இலக்கணநூல் என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளதே தவிர வேதங்களை அறிந்தவர் என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளதாகக் கொள்ள இயலவில்லை. 'பரதநாட்டியத் தொழிலைக் குலத்தொழிலாக ஏற்றுக் கொண்ட குலம் என ஒருவாறு ஏற்றுக் கொள்ளலாம்'[3] என்னும் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்களின் கருத்து ஏற்றுக் கொள்ளத்தக்கது. நவநீதன் என்பது கண்ணனைக் குறிக்கும் பெயர்களுள் ஒன்று. நவநீதநடன் வெண்ணெய்க்காக ஆடியவன் என்று பொருள்படும். இவர் வைணவ சமயத்தைச் சார்ந்தவர் என்பது, "கார்கொண்ட மேனிக் கறைகொண்ட நேமிக் கமலக்கண்ணன், பார்கொண்ட பாதத்தை யேத்திப் பகர்வன் பாட்டியலை" என்னும் அடிகளாலும்,

'அரியத்தன்' என்னும் உரைக்குறிப்பாலும் விளங்குகின்றது.

இவர் வாழ்ந்த நாட்டை 'நவநீதநாடு' என்றே இதன் பழைய உரையாசிரியர் குறித்துள்ளார். 'இது திருவெண்ணெய் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட தொண்டை நாடு என ஊகிக்கலாம்'[5] எனக்கூறுவர். அவ்வாறு கூறுவதற்குச் சான்றேதும் காணப்படவில்லை.

**காலம்:**

இந்நூல் வச்சணந்தி மாலைக்குப் பின்னர்த் தோன்றியது என்பது பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்களின் கருத்து.[6] எனவே இந்நூல் 13ஆம் நூற்றாண்டளவில் அல்லது அதன் பின்னர்த் தோன்றியதாகக் கருதலாம்.

**நூல் அமைப்பு:**

இந்நூல் முதன்மொழியியல், செய்யுள் மொழியியல், பொதுமொழியியல் என் முப்பகுதிகளாக அமைக்கப் பெற்றுள்ளது. பொதுமொழியியலில் சிறப்புப்பாயிரம் நீங்கலாக இருபத்துநான்கு காரிகைகளும், செய்யுள் மொழியியலில் நாற்பத்து மூன்று காரிகைகளும், பொது மொழியியலில் முப்பத்தேழு காரிகைகளும் அமைந்துள்ளன.

மற்றைய பாட்டியல் நூல்களைப் போன்றே மங்கலம், சொல், எழுத்து, தானம், பால், உண்டி, வருணம், நாள், கதி, கணம் எனப்பத்துப் பொருத்தங்களை இந்நூல் கூறியுள்ளது. பின்னர்த் தசாங்கங்களாக, மலை, ஆறு, நாடு, ஊர், தார், பரி, யானை, கொடி, முரசு, ஆணை என்பனவற்றைக் கூறியுள்ளார்.[7] தசாங்கம் பாடுங்கால் அவற்றின் அயல் கொலைச் சொல் நீக்கிப்பாடுதல் வேண்டும் என்பர். தசாங்கங்களைப் பாடுங்கால் ஒவ்வொன்றும் ஒவ்வோர் சீரில் வருதல் சிறப்புடையது எனவும் வகையுளியாக இரு சீரிடத்தில் தசாங்க உறுப்புக்கள் வரல் ஆகா எனவும் இவர் குறிப்பிடுகின்றார்.[8]

இந்நூலுள் ஆசிரியர் அங்கமாலை, அட்டமங்கலம், அந்தாதி, அரசன் விருத்தம், அலங்காரபஞ்சகம், ஆற்றுப்படை, ஆனைத்தொழில், ஆனைவிருத்தம், இணைமணிமாலை, இருபாஇருபது, உலா, ஊர்வெண்பா, ஒலியந்தாதி, கலம்பகம், காப்புமாலை, குடைவிருத்தம், குதிரைவிருத்தம், குழமகன், கேசாதிபாதம், கைக்கிளை, கோல் விருத்தம், கோவை, சிறப்புப்பாயிரம், சிறுகாப்பியம், சின்னப்பூ, தசப்பிராதுற்பவம், தசாங்கத்தியல், தசாங்கம், தற்சிறப்புப்பாயிரம், தாழிசைக்கவி, தூது,

தொகை நிலைச் செய்யுள், தொகைவெண்பா, நகரவிருத்தம், நயனப்பத்து, நவமணிமாலை, நாட்டுவிருத்தம், நாமமாலை, நாழிகைக்கவி, நான்மணிமாலை, பயோதரப்பத்து, பரணி, பல்சந்தமாலை, பறந்தலைச்சிறப்பு, பன்மணிமாலை, பாதாதிகேசம், பிள்ளைத் தமிழ், புகழ்ச்சிமாலை, பூவைநிலை, பெருங்காப்பியம், பொதுப்பாயிரம், பொன்னூசல், மடல், மருட்பாப்பிரபந்தம், மும்மணிக்கோவை, மும்மணிமாலை, மெய்க்கீர்த்தி, வஞ்சிமாலை, வண்ணவிருத்தம், வாள்விருத்தம், வில்விருத்தம், வேல்விருத்தம் என்பவற்றின் இலக்கணங்களைப் பேசியுள்ளார்.

பாட்டியல் நூல்களில் கூறப்பெற்ற பத்துப்பொருத்தங்களில் பெரும்பான்மையானவற்றைப் பின்பற்றும் வழக்குப் புலவர்களிடத்தினின்றும் அகன்றுவிட்டது. மங்கலச்சொல் அல்லது மங்கலமொழியை இன்றுவரைப் பலர் செய்யுள் தொடக்கத்தில் கருதுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. மற்றைய ஒன்பதும் சிற்றிலக்கியங்களில் பின்பற்றப்பட்டுப் பின்னர் கைவிடப் பெற்றவை. அவ்வாறு கைவிடப் பெற்றமைக்குப் பல காரணங்கள் உண்டு. பாட்டியல் நூல்கள் அவற்றை ஒரே அமைப்பில் கூறவில்லை. பாட்டுடைத் தலைவனின் பெயரின் முதல் எழுத்தையும், செய்யுளின் தொடக்கத்தையும் இணைத்துப் பார்த்துப்பால, குமரம், அரசன், மூப்பு, மரணம் என்ற நிலையில் மூப்பு, மரணம் என்பன ஆகா என்று கூறுவர். இவ்வகைப்பொருத்தங்கள் பிற்காலத்தெழுந்த நூல்களில் பின்பற்றப்படவில்லை. நாட்பொருத்தம் என்பது எழுத்துக் களுக்குரிய விண்மீன்களை அமைத்து முதன்மொழியிலும், தலைவன் பெயரிலும் அமைந்துள்ள நாள் பொருத்தமுற அமைகிறதா என்று பார்ப்பது. பாட்டுடைத் தலைமகன் இயற்பெயரெழுத்து நாள் முதல் மங்கலச் சொல்லெழுத்து நாள் அளவும் எண்ணினால் ஒன்று, மூன்று, ஐந்து, ஏழு, ஆகா என்றும்; இரண்டு, நான்கு, ஆறு, எட்டு, ஒன்பது நன்றாம் எனவும் கூறுகின்ற நவநீதப்பாட்டியல் பாட்டுடைத்தலைவனின் நாள் ராசிக்கு மங்கலச் சொல்லின் நாள் ராசி எட்டாம் ராசியாய்வரின் அட்டமராசி ஆகாது எனவும் கூறுகின்றது. எட்டு என்பதனை ஆகும் என்றும் ராசி அளவில் எட்டு அட்டமராசி என விலக்குவதும் ஒருவகை முரணாகக் காணப்படுகின்றது.

சொல்லிய நாள் இருபத்தேழையும், ஒன்பது ஒன்பதாக மூன்று கூறாக்கிப் பாட்டுடைத்தலைமகன் இயற்பெயரின் முதலெழுத்தின்

நாளைத் தொடங்கிக் கூறுகளை யெண்ண ஒன்று, மூன்று, ஐந்து, ஏழ்வரின் பொருந்தா[10] என்று கூறுகின்ற வெண்பாப்பாட்டியல், உபசன்மம் அல்லது மூன்றாம் ஒன்பதில் மூன்றும், ஐந்தும், ஏழும் பொருந்துமெனக் கூறுகின்றது. இவற்றையெல்லாம் நோக்கும் பொழுது இவை எவ்வெவ்வடிப் படையில் வகுக்கப்பெற்றன என்பது விளங்கவில்லை. ஒரு பாட்டியலுள் முரணும், வேறுபாட்டியல் களோடு முரணும் என்ற இருவகை முரண்களால் எதனைப் பின்பற்றுவது எதனைவிடுவது என்பது பெருங்குழப்பமாக இருந்திருக்க வேண்டும். எனவே முதன்மொழியியல் அல்லது பொருத்தவியலில் கூறப்பெற்ற வற்றைப் புலவர்கள் பின்பற்ற இயலாதநிலை ஏற்பட்டிருக்க வேண்டும். பொருத்தவியலில் கூறப்பெற்ற பொருத்தங்களைப் பின்பற்றாத நிலையில் ஏற்பட்ட குறைபாடுகள் ஒன்றுமில்லை என்பதையும் மக்கள் உணர்ந்திருக்கவேண்டும்.

செய்யுள் மொழியியலில் கூறப்பெற்ற இலக்கணங்கள் போற்றப்பெற்று வந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. அதனுள் காணப்பெறுகின்ற சிற்றிலக்கியங்களுக்குரிய இலக்கணங்கள் என்றும் கொள்ளத்தக்கவையாய் உள்ளன. எனினும், கோல்விருத்தம், நகரவிருத்தம், நாழிகைக்கவி, வஞ்சிமாலை, வண்ணவிருத்தம் போன்ற அரிதான நூல்களுக்கு இலக்கணம் கூறப்பெற்றுள்ளன. நவநீதப்பாட்டியலில், பொருநர், பாணர், கூத்தர், இவர்களைப் புலவர்கள் ஆற்றுப்படுப்பது ஆற்றுப்படையின் இலக்கணம் என்று கூறப்பெற்றுள்ளது. இதனைப் புலவர்கள் வாழ்த்துநலம் நிறைந்த பொருநரைப் பாணரைக் கூத்தரை நீணிதியம்பெறும்படி யாற்றுப் படுப்பன வாசிரியம் பெறுமே[11] எனக் கூறுவதால் அறியலாம். இக்காரிகையின் உரைகூறவந்த உரையாசிரியர் "ஆறு அகவற் கவியாகப் பாடுவது ஆற்றுப்படை யென்னும் பிரபந்தமாம்" என்று கூறியுள்ளமை வியப்பாக இருக்கின்றது. பத்துப் பாட்டிலுள்ள ஆற்றுப்படை நூல்கள் இவ்வாறு ஆறு ஆசிரியப்பாவால் அமைந்தனவாகக் காணப்பெறவில்லை என்பது சிந்திப்பதற்குரியது.

அறம், பொருள், வீடு மூன்றையும் பழித்து இன்பமே பொருளாகக் கருதி, அவ்வின்பத்துக்கிடமான சிறப்பினையும், வைத்துப் பாட்டுடைத் தலைமகன் பேருக்கியைந்த எதுகை அமையக் கலிவெண்பாவினால், தலைமகன் குறையிரந்து குறைபெறாது மடலேறுவதாய் ஈரடியெதுகை வரப்பாடுவது மடல் என்று இவ்வாசிரியர் கூறுகின்றார்.[12] இவ்வகை நூலை மடல் என்றே

பிரபந்தத்திரட்டும், வச்சனந்தி மாலையும் கூறுகின்றன. இதனை வளமடல், உலாமடல் என்று கூறுகின்ற நூல்களும் உள. பாட்டியல்கள் இருவகை நெறிகளைப் பின்பற்றுவதாகக் கூறப்பெறும். அவற்றுள் ஒன்று அகத்தியர் பாட்டியல்நெறி என்றும்; மற்றொன்று இந்திரகாளிய நெறி என்றும் கூறப்பெறும். நவநீதப்பாட்டியல் அகத்தியர் நெறியைப் பின்பற்றியமைக்கப் பெற்றதாக இதன் பாயிரங்கூறுகின்றது. வச்சணந்தி மாலை இந்திர காளிய நெறியைப் பின்பற்றியது என்று கூறப்பெறுவது. எனினும் சில இடங்களில் நவநீதப்பாட்டியலும், வச்சணந்தி மாலையும் ஒத்துக் காணப்பெறுகின்றன.

வஞ்சிப்பாவில் அமைந்த முழுநூல் ஒன்றும், இதுவரை கிடைத்திலது. பத்துப் பாட்டுப் பாடல்களுள் வஞ்சிநெடும் பாட்டாகவும், இடையிடையே வஞ்சியடிகள் விரவிய ஆசிரியப்பாக்களை மட்டிலுமே காண இயல்கின்றது. ஆனால் பாட்டியல் நூல்கள் வஞ்சிப்பாக்களினால் அமைந்த சிற்றிலக் கியங்களைச் சுட்டியுள்ளன. வெண்பாப்பாட்டியல் பானை வஞ்சி என்ற நூலைக் குறிப்பிடுகின்றது. எல்லாவடியும் மயங்கிய வஞ்சிப்பாவால் ஆடவரைப் புகழ்ந்து பாடுதல் நாமமாலை எனவும், பெண்களைப் புகழ்ந்து பாடுதல் புகழ்ச்சி மாலை எனவும்; மற்றெல்லாப் பொருளாலும் வஞ்சிப்பாவிற் பாடினால் வஞ்சி மாலை எனவும் நவநீதப்பாட்டியல் கூறுகின்றது.[13]

தொல்காப்பியர் மருட்பாவின் இலக்கணங்கூறுங்கால்,

> "புறநிலை வாயுறை செவியறி உறூ உவெனத்
> திறநிலை மூன்றுந் திண்ணிதின் தெரியின்
> வெண்பா வியலினும் ஆசிரிய வியலினும்
> பண்புற முடியும் பாவின மென்ப" [14]

எனக்கூறுகின்றார். இம்மருட்பாவின் இலக்கணத்தை யாப்பருங்கலம், யாப்பருங்காரிகை போன்ற நூல் அப்படியே அடியொற்றியுள்ளன. பாட்டியல் நூல்களும் இவ்விலக்கணத்தை ஒட்டிச் சிற்றிலக்கிய நூலாகக் கூறுகின்றமை நினைக்கத்தக்க தாகும். புறநிலை வாழ்த்து, செவியறிவு றூஉ, கைக்கிளை, வாயுறை என்னும் நான்கு பொருளின் மேலும் மருட்பா வரும் என்பதூஉம் அவ்வாறு வருவதனை மருட்பாப்பிரபந்தம் எனவும் கூறுகின்றார்.

பெருங்காப்பிய இலக்கணத்தையும், காப்பிய இலக்கணத்தையும் நவநீதநடன் தண்டியலங்காரத்தை அடியொற்றியமைத்துள்ளார்.

சித்திரச் செய்யுட்களைக் கூறுங்கால் முந்திரியார் வஞ்சினம், விதான வருக்கம் போன்ற நூல்களை உரையாசிரியர் குறிப்பிட்டுள்ளார். இந்நூல்கள் என்ன என்பது விளங்கவில்லை.

தலைவியின் கண்ணைப்பற்றி ஆசிரிய விருத்தத்தினாலோ கட்டளைக்கலித்துறையினாலோ பத்துப்பாடல்களைப் பாடுவது நயனப்பத்து என்றும்; தலைவியின் தனத்தைப்பற்றி மேற்கூறியவாறு பாடுவது பயோதரப்பத்து என்றும் வெண்பாப்பாட்டியல் கூறுகின்றது.

> "அரசர் விருத்தம் கலித்துறை யீரைந்து கண்முலைமேல்
> பரசி னயனம் பயோதரஞ் சேர்ந்த விருத்தமென்ப" [15]

என நவநீதப்பாட்டியல் நயனவிருத்தம், பயோதர விருத்தம் எனப்பெயர் கொடுத்துள்ளமை நினைக்கத்தக்கது. கலித்துறையினாலும் பாடலாம் என்று அமைத்த ஆசிரியர் விருத்தம் எனப்பெயர் முடிவு கூறியுள்ளார்.

பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம், நூலின் இயல்பு போன்றவற்றைப் பொது மொழியியலில் தொல்காப்பியரையும், நன்னூலாரையும் பின்பற்றி இலக்கணம் அமைத்துள்ளனர்.

அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் இயல்புகளையும் பாக்களின் சாதிகளையும் பொதுமொழியியலில் அமைத்துச் செல்கின்றார். கவிஞர்களையும், கவிகளையும் பிறபாட்டியல் நூல்களை மனத்துட்கொண்டு கூறியுள்ளார். கள்ளக்கவிக்கு விளக்கம் தரும் வகையில் உரையாசிரியர் பருணர் பாட்டியலின்றும், ஒரு நூற்பாவைச் சான்று காட்டியுள்ளார்.

> "கள்ளக் கவியே கவிஞன் றனைமகற்குக்
> கள்ளத் தொடுபெயர்களைந்தே யாக்கி
> ஒருவர்க் கியம்பும் மாணி லோனே" [16]

என்னும் நூற்பாவை எடுத்துக் காட்டியுள்ளமை சிந்திக்கத்தக்கது. சார்த்துக்கவி, வெள்ளக்கவி, பிள்ளைக்கவி எனக்கவிஞர்களைக் கூறியுள்ளமையும் மனங்கொள்ளத்தக்கது.

நல்லவை, நிறையவை, தீயவை, குறையவை என அவைகளைப் பாகுபடுத்தியுள்ளார்.

> "அறந்திறம் பாநல் லறிவோ ரறுபத்து நாற்கலையும்
> திறந்தெரிந் தோர்சினஞ் செற்றம்பொய் காமம்
> சிதைக்குஞ்சித்தம்
> மறந்தொரு காலு மொருபாற் படாதவர்மற்றுங் குற்றம்

துறந்தவர் தாங்களும் நல்லவை யாமென்று சொல்லுவரே" [17]

என நல்லவையின் இலக்கணத்தைக் கூறுகின்றார்.

அரசனை முதலாகக் கொண்டு அந்தணர், வணிகர், வினைஞர் கூட்டம் அமைந்து ஒருபாற் கோடாது எல்லாப் பொருள்களும் முற்றக்கற்றார் ஆயினும் அவரவர் உரைக்குமாறு முற்றக்கேட்போர் அவை நிறையவை எனப்படும்.

உரைத்த கருத்துணர்த்தி அச்சொற்களால் ஆகும் பொருள் காண்பார் வாய் தடுமாற்றச் சொல்லினையும் குற்றமாக எடுத்து நாட்டுவோர் உரைத்த பொருள் முடிவு பாராதே உத்தேசத்தைக் கொண்டு ஒரு பக்கம் சாரத்தமது மேற்கோள் முடியநில்லாது வேண்டியவை வந்ததுரைப்போர், மறமும் சினமும் மிக்கிருப்போர் இருப்பது தீயவையாம் என்பர்.

பொருள்படுத்துவாரை வாதித்துப் பலகால் நகைபெய்து ஒருதிறம் பழித்துப் பாங்காக வுரைத்து அங்கங்களாலே நாடக முத்திரை காட்டித் தம்மில் ஓர் நாயகமின்றிப் பலரும் நாயக மாய், இருவரும் உரைக்கும் நூல்பண்டு தாங்கள் அறிவது மன்றிப்பகை செய்வதே மிகுந்து தருமநெறி விட்டிருந்தோர் தம்முள்ளே சங்கேதம் செய்து பொய்யுரைப்பது குறையவை எனக் கூறியுள்ளார். அவைகளைப் பற்றிக்கூறும் இவ்விடங்களில் ஆசிரியர் தருக்க நூலையடியொற்றிச் சில கருத்துக்களைக் கூறியுள்ளார். இத்தகைய அவைகளை நாம் இன்று காண்கிறோம் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதே போன்று வாதினில் வல்லவர் இலக்கணத்தையும், வாதத் தொலைவின் இலக்கணத்தையும் தருக்க நூலை ஒட்டியே அமைத்துள்ளார். செய்யுள் செய்ய வல்லார், செய்யலாகாதார், கேட்பிக்கும் நெறி ஆகிய பல கருத்துக்களைப் பொது மொழியியலில் கூறியுள்ளார்.

**மகடூஉ முன்னிலை:**

இந்நூல் செய்யுட்கள் பெரும்பான்மையும் மகடூஉ முன்னிலையாக அமைந்துள்ளன. மகடூஉ முன்னிலை என்பது ஒரு பெண்ணை விளித்துச் சொல்வதுபோன்று சொல்லப்படுவது என்னுங் கருத்தினின்றும் வேறோர் கருத்தை இதன் உரையாசிரியர் கூறியுள்ளார்."இதனுள் மகடூஉ முன்னிலை என்று சொல்லப்படுவது யாரையோவெனின், சத்திதேவியைச் சேவிக்கப்பட்ட பெண்கள் பதினாறு பேருண்டு; அவர்கள்பேர் மாலினி, மோகினி, யோகினி, போகினி, வீணி, பராயணி, கபாலி,

கபாலயோசனி, அற்புதை, விந்தை, அனிதை, வனிதை, வாசலை, மாயி, வராகி, நாரணி இப்படிச் சொல்லப்பட்ட சத்திகளில் அதிபாக்கியமுள்ள மாலினி சத்தி என்பாளையே இலக்கணங்களுக்கு முன்னிலையாக வைப்பது என்று அறிக"[18] எனக்கூறுவது கருதத்தக்கது. எதனையும் கடவுள் நோக்கில் வைத்துச் சிந்தனை செய்யும் போக்கு இருந்துள்ளமையை இதனால் அறியலாம். குறிப்பாகத் தாய்த் தெய்வவழிபாடு சிறப்புற்றோங்கிய காலத்தில் இத்தகைய கருத்திருந்திருக்கலாம் எனக் கருத இடமிருக்கின்றது.

இதற்கு உரை எழுதிய ஆசிரியர்கள் மூவர். அவர்களுள் காலத்தால் முற்பட்டவர் இருவர். அவர்கள் உரை மிக விரிவாகக் காணப்படுகின்றன. மிக ஆழமான, பரந்துபட்ட புலமை உடையவர்களாக இவர்கள் காணப்படுகிறார்கள். பல்வேறு இலக்கண நூல்களினின்றும் எடுத்துக்காட்டைத் தந்துள்ளனர். அவற்றுள் காலத்தால் மறைந்தன பல. அவர்களின் எடுத்துக்காட்டுக்களில் இடம் பெற்ற நூல்கள்:

1. அகத்தியனார் ஆனந்தவோத்து (84)
2. அணியியல் (105)
3. அவிநமனார் கலாவியல் (96)
4. இந்திரகாளியம் (6, 22 -3, 92)
5. கல்லாடம் (35, 88, 93)
6. கல்லாடனார் கலாவியல் (92)
7. கல்லாடனார் வெண்பா (92)
8. செய்யுள் வகைமை (33, 36, 42, 68, 96, 99, 104)
9. திருப்பிரவாசிரியர் தூக்கியல் (104)
10. தொல்காப்பியர் பாட்டியல் (21)
11. தொல்லாசிரியர் செய்தது (101)
12. பருணர் பாட்டியல் (3, 7, 26, 31, 73, 84, 87, 104-5)
13. பிங்கல சரிதை (66)
14. பொண்கையார் (10, 31, 44, 75,
    பொய்கையார் பாட்டியல் 81, 92)
    பொய்கையார் கலாவியல்
15. மாமூலம் (5, 6, 22, 35, 68, 82, 87, 104)
16. முந்திரியார் வஞ்சினம் (67)
17. முள்ளியார் கலித்தொகை (34-6, 38, 40, 48)
18. வாமன சரிதை (66)
19. பன்னிருபாட்டியல் (பல இடங்கள்)

நவநீத நடனார் செய்த நவநீதப்பாட்டியல் பாட்டியல் நூல்கள் சிறப்புற்றிருந்த காலகட்டமாகிய பதின்மூன்றாம் நூற்றாண்டில் செய்யப்பெற்றது. இவர் வேதம் வல்ல அந்தணர் அல்லர். நாட்டிய வேதம் வல்ல நட்டுவனாராக இருக்கலாம். பல பாட்டியல் நூல்களில் உள்ளமை போன்றே முதன் மொழியியலைச் செய்துள்ளார். அவைபெரும்பாலும் காலத்தோடு பொருந்தாதவை. பல சிற்றிலக்கியங்களின் இலக்கணங்கள் இந்நூலில் கூறப்பெற்றுள்ளன. அவற்றுள் சில அரியனவாகக் காணப்பெறுகின்றன. அவையின் இலக்கணத்தை மிக விரிவாகக் கூறுகின்றார். தொல்காப்பியம் முதலாகப் பல்வேறு நூல்களைத் தழுவி இவர் நூல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தருக்கநெறி நின்று இவர் பல இலக்கணங்களைக் கூறியுள்ளார் என்பது சிந்திக்கத்தக்கது. உரையாசிரியர் ஆழ்ந்த பரந்த தமிழ் நூற்புலமை மிக்கவர். அவர் காட்டியுள்ள எடுத்துக் காட்டுக்களினால் பல மறைந்து போன இலக்கண நூல்களை அறிய முடிகின்றது.

1. யாப்பருங்கலக்காரிகை - பாயிரம் உரை
2. நவநீதப்பாட்டியல் - பாயிரம்
3. நவநீதப்பாட்டியல், முன்னரை, பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை, பக்கம் XII
4. நவநீதப்பாட்டியல் - பாயிரம்
5. சோம.இளவரசு - இலக்கண வரலாறு
6. நவநீதப்பாட்டியல், முன்னுரை, பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை
7. நவநீதப்பாட்டியல், நூ.1
8. நவநீதப்பாட்டியல், நூ.24
9. நவநீதப்பாட்டியல், நூ.19
10. நவநீதப்பாட்டியல், நூ.18
11. வெண்பாப்பாட்டியல் நூ.18
12. நவநீதப்பாட்டியல் நூ.47 உரை
13. நவநீதப்பாட்டியல நூ.48
14. தொல். நூ.1417
15. நவநீதப்பாட்டியல் நூ.51
16. நவநீதப்பாட்டியல் நூ.87 எடுத்துக்காட்டு நூற்பா
17. நவநீதப்பாட்டியல் நூ.88
18. நவநீதப்பாட்டியல் தற்சிறப்புப்பாயிரம் உரை.

# தமிழின் பழமை

சென்ற இதழ் தொடர்ச்சி... பெரும்புலவர் திரு. திருநாராயணய்யங்கார்

ஒருசில பொருள்கள் இயல்பாகவே திரிந்து வேறுபடுவன போல ஒருசில சொற்களும் இயல்பாகவே திரிந்து வேறுபொருளுணர்த்துகின்றன. இதனை முன்காட்டிய மிகப்பலவான சொற்களிற் காணலாம். பின்வரும் ஆடு-மாடு, அயர்வு-மயர்வு, இளை-மிளை, முன்-பின், இலை-ஓலை, சடை-கிடை.., அடை-வடை, இடை-கடை, அடி-முடி, அறம்-மறம் முதலியவற்றுள்ளும் காணலாம்.

இன்னோரன்ன திரிபையுடன்பட்டே நன்னூலார், வல்லொற்று வரினே இடத்தொகையாகும், மெல்லொற்று வரினே பெயர்த்தொகையாகும் என்று பொருள்வேறுபாடு காட்டினர். (உதாரணம்: வடுகக் கண்ணன், வடுகங்கண்ணன்.)

இக்காலத்திலும் கிருஷ்ணன் என்ற பெயர் ஆசாரி என்னும் வருமொழிபுணர்ந்துழி, கிருஷ்ணாசாரி என்று மாத்துவப் பிராமணர் பெயராயும், கிருஷ்ணமாசாரி என்று திரிந்து வைஷ்ணவப் பிராமணர் பெயராயும் இருவேறுபொருளுணர்த்தக் காண்கிறோம். இத்திரிபும், அதன் பொருள் வேறுபாடும் மக்களால் புத்திபூர்வமாகக் கற்பித்துக்கொள்ளப் படாமல் இயல்பானேயமைந்தன.

இவ்வாறு சொல்லும் பொருளும் இயல்பாகவே ஒற்றுமைபற்றி நிற்றலால் மரபு பற்றிய பெயர்களும் பிறவும் அநாதியாகவே பொருளோடு தொடர்புடையனவென்றே கொள்ளத்தகும். இவ்வாறான தொடர்புடைய சொற்பொருள்களைக் காளிதாஸமஹாகவியும் 'வாகர்த்தாவிவஸம் பிருக்தௌ' என்று விட்டுநீங்காத ஒற்றுமையுடைய அர்த்தநாரீசுவரருக்கு உவமைகூறினார்.

கல்வியிற் பெரியராகிய கம்பநாடரும் அகத்திய முனிவரை, 'என்று முளதென்றமிழியம்பியிசை கொண்டான்' என்றார்.

இதில் என்றுமுள தென்றமிழ் என்றதனால் இயற்றமிழ் மொழிகள் அநாதியாயுள்ளனவென்றும், 'இயம்பி இசைகொண்டான்' என்றதனால் அவ்வியற்கை மொழிகளை மக்கள் வாய்ப்பட்டு வரும் வழுஉக்களைந்து செய்யுட்கு உரியனவாகத் திருத்தியமைத்தார் என்றும் கருதினராயிற்று.

இயற்கையாவது எங்கும் நிறைந்த முற்றறிவுடைய முழுமுதற் கடவுளின் நித்தியஸங்கற்பரூபமான இச்சையால் நிகழ்வது, செயற்கையாவது சிற்றறிவுடைய மக்களின் இச்சையோடு கூடிய செய்கையால் நிகழ்வது.

முற்றறிவுடைய முழுமுதற்கடவுள் மக்களுயிருள்ளும் அருவாயமைந்து அறிவு இச்சை செயல்களைத் தோற்றுவித்தலால் அவ்வியற்கை மொழிகளெல்லாம் மக்களிடம் இயல்பானே தோன்றற்குரியன. ஆதலால் தமிழ்மொழியின் ஒரு பகுதி அநாதியாயுள்ளதென்று கொள்ளத்தகும்.

வடமொழியுள்ளும் இவ்வியற்கையாலும் செயற்கையாலும் அமைதல்பற்றி ப்ராகிருதம், ஸம்ஸ்கிருதம் என மொழி இருவேறுவகையாயிற்று. சொல்லின் கிழத்தியை உதிதை என்றும் அநுதிதை என்றும் இருவேறு வடிவுடையளாக வேதமும் கூறாநின்றது.

இதுகாறுங் கூறியவாற்றால் இயற்கையறிவொன்றே யுடைய விலங்கினங்களுக்கு இயற்கையொலிக்குறிப்பு அநாதியாயமைந் திருப்பது போல இயற்கையறிவுடைய மக்களுக்கும் இயற்கையொலிக்குறிப்பாலமையும் இயற்கைமொழிகள் அநாதியாயமைந்திருக்கவேண்டுமென்றும், அம்மக்கட்கு இயற்கையறிவோடு செயற்கையறிவு முண்மையால் அவ்வியற்கை மொழிகளைக்கொண்டு பல செயற்கை மொழிகளையும் ஆக்கிக்கொண்டனரென்றும், ஆதலால் இக்காலத்தில் இவை இயற்கைமொழி இவை செயற்கைமொழி யென்று பகுத்தறியமுடியாதபடி அவை உருமாறிவிட்டன வென்றும் அறியலாம்.

ஆயின் இக்காலத்தில் பிறக்கும் மக்கட்குழவிகளிடம் அவ்வியற்கைமொழி தானேதோன்றலாமே? என்ற சங்கை யுண்டாகலாம். அக்குழவிகள் இயற்கைமொழியாற் பேசவேண்டிய பருவமும் உறுப்புக்களுந் தோன்றுதற்குமுன்னமே பெற்றோர்கள் பேசும் செயற்கைமொழிகளிற் பயிற்சியுண்டாகின்றமையால் அவ்வியற்கைமொழி புலப்படுதல் அரிதாயிற்று.

செயற்கைக்குப் புலப்பாடில்லாதவிடத்தே இயற்கை புலப்படுகிறது. இதனைப் பின்வரு முதாரணத்தால் அறியலாம்.

"வல்லரக்கரின் மால்வரைபோய்விழுந்
தல்லரக்கினுருக்கழல் காட்டதர்க்
கல்லரக்குங்கடுமையவல்லநின்
சில்லரக்குண்டசேவடிப்போதென்றான்"

என்றமையால் வல்லரக்கரடிகள் காட்டிற்சென்று திரிந்து செயற்கைவலியடைந்தமையால் அவை கடுமையவாயின வென்பதும், அவ்வாறான செயற்கைவலிபெறாதவிடத்தே இயற்கையான் மகளிரடிக்கமைந்தமென்மை புலப்படுகிறதென் பதும் அநுபவத்தாலும் அறியத்தகும்.

இங்குத் தமிழின் பழமையைப்பற்றிப் பேசுமிடத்தில் இடையிடையே தொடர்புபற்றிக் காட்டப்பட்ட சொற்றிரிபுகளெல்லாம் பன்மொழிகளிலும் பயிற்சிபெற்றுயர்ந்த மொழி நூல்வல்லாரால் ஆராயத்தக்கவனவாதலால் அவை அவரால் ஆராய்ந்து முடிவுசொல்லற் குரியனவென்றே அறிஞரால் அறியத்தகும்.

(1931 நவம்பர் செந்தமிழ் இதழில் வெளிவந்த கட்டுரை)

# கவிதை எது? எதற்கு?

*ம.ரா.போ.குருசாமி, கோவை.*

சட்டமன்றங்களில் உருவாக்கப்படும் சட்டங்களே சமுதாயத்தை - மனித சமுதாயத்தை - ஆளுகின்றன. எனவே, சட்டமன்ற உறுப்பினர்களைச் சமுதாய ஆளுநர்கள் என்று ஒருவகையில் சொல்லலாம்தான். ஆனால், கட்சிப் பிடிக்குள்ளும் விருப்பு வெறுப்புக்குள்ளும் சிக்கியுள்ளவர்கள் அவர்கள், எனவே, மாற்றுக்கட்சியும் மாறு கட்சியும் சட்டமன்றத்துள் மேலாண்மை பெறும்போது சட்டங்கள் திருத்தப்படுகின்றன. திரிக்கப்படுகின்றன. தீர்த்துக்கட்டப் படுகின்றன.

சட்டமன்றங்களில் மேலாண்மை செலுத்தும் அரசியல்வாதிகளைவிட படைப்பரங்கிலே கவிதை படைக்கும் கவிஞர்கள் நிலையான சட்டங்களைச் சிந்தனையரங்கிலே படைத்துச் செல்வாக்குடையவர்களாகின்றனர். சட்டம் உருவாக்குவோர் என்ற "பட்டம்" கவிஞர்களுக்கு இல்லையென்றாலும் அவர்களை மானிடச் சட்டம் வகுப்போர் என்று மதிப்பது பொருத்தமேயாகும். Poets are the unacknowledged legislators of the world என்பது ஷெல்லியின் கருத்து. எம்.எல்.ஏ என்ற 'வால்' இல்லைதான்; எனினும் இயற்கையதிகாரம் கவிஞர்களுக்கு உண்டு.

கவிஞர்களுக்கு இந்த மதிப்பு ஏற்பட என்ன காரணம்? சத்திய தரிசனம் உடையவர்களாய் சாதி சமயச் சழக்கற்ற சிந்தனைவயத்தராய் இருப்பதால் அவர்கள் படைக்கும் சொல்லோவியங்கள் சக்தி உடையனவாக அமைந்துவிடுகின்றன.

கவிதைக்கும் கவிஞனுக்கும்
நிஜமே கம்பீரம் (460)

என்ற வைரமுத்துவின் வாசகம், ஷெல்லியின் இதயக்கருத்துக்கு வலுவூட்டுவதைக் காணலாம்.

ஆனால், இதிலே ஒரு சங்கடம் இருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. தன் பிள்ளை தன் பெண்டு தன் சுற்றம் என்று சின்னக் கவலைகளால் தின்னப்படுகின்ற மனிதன் என்னும் மாபெரும் பூச்சிக்குக் கவிதை வகுக்கும் சட்ட திட்டம் புரிவதில்லை. ஏனெனில் இந்த வலைப் பின்னல்களில் சிக்கிவிடாமல், விட்டு விடுதலையாகிய சிட்டாய், சிந்தனை வானிலே வட்டமிட்ட வண்ணம் சத்தியக் குரலெடுத்துப் பாடும் கவிதை வேகம் ஒரு தனி வகைப்பட்ட மொழியில் வெளிப்படுகிறது.

கவிதை எல்லா மனிதர்களுக்காகவும்
படைக்கப்படுகிறது. ஆனால், அது
எல்லா மனிதர்களாலும் புரிந்துகொள்ளப்படுவதில்லை என்பதே அதன் கவலையாக இருக்கிறது.

(பெய்யெனப் பெய்யும் மழை: எனக் கவிஞர் வைரமுத்து சொல்லியிருப்பது இங்கே நினைத்துப் பார்க்கத்தக்கது.

கவிஞனின் பார்வை சாதாரண மேதைகளின் பார்வையைவிடத் தனியான சிறப்புக் கொண்டது. 'சாதாரண' என்ற அடை மேதைக்குப் பொருந்துமா என்று கேட்கத்தோன்றும். பூத, பௌதிகக் கூறுகளைத் தாண்டி 'தன்னை மறந்த லயந்தன்னில்' கவிஞன் காணக்கூடியவன்; அவனை நம் அளவுகோல்களைக் கொண்டு கணிக்க முடியாது. மேதைகள் எனப்படுவோர் அறிவால், அறிவுக்கூர்மையில் சாதாரண மனிதர்களைவிட மேம்பட்டவர்களே. ஆனால், காரண-காரிய விவகார உலகத்தின் போக்கில்தான் அவர்கள் செயல்படுகிறார்கள். கவிஞன் காலூன்றுவதற்குத்தான் காரண - காரிய உலகம் வேண்டும்; அதன்மேல் அவன் செயற்பாடுகளெல்லாம் காரண - காரிய விவகாரங்களின் விதிகளுக்குக் கட்டுப்படுவதில்லை. எல்லாம் மீறிய/ வீறிய எல்லையிலிருந்து செயல்படுவது கவிஞனின் பார்வை. அதனால்தான் கவிதைப் படைப்பிலே தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலாவைத் தீண்டும் இன்பம் தோன்றுகிறது. கவிஞனின் சத்திய தரிசனத்துக்கு அறிவியல் சட்ட திட்டங்களின் தரவுகள் அவனுக்குத் தேவை இல்லை; தரவுகளின் ஆதாரம் இல்லாமலே சத்தியத்தை அவனால் தரிசிக்கமுடியும்.

"விஞ்ஞானம் விளக்கு வைத்துத்
தேடுவதைக் கண்களை மூடிக்கொண்டு
கண்டறிகிறது கவிதை"

(பெ.பெ.மழை) என்று கவிஞர் வைரமுத்து கூறுவது முற்றிலும் உண்மை.

பாரதிதாசனின் புரட்சிக்கவியில் வரும் கவிஞனை நினைவிலே கொண்டுபாருங்கள். நிலாக் காட்சியை இரு விழியில் பருகினான், மனத்தால் உண்டான். ஆம், விழியால் பார்க்கவில்லை, பருகினான்; வாயால் உண்டானில்லை, மனத்தால் உண்டான். நிலாவின் உலாவைப் பார்ப்பதற்கு மண் சார்ந்த பூங்கா வேண்டியிருந்தது, எல்லாருக்கும் இருக்கின்ற புறக் கண் வேண்டியிருந்தது. அதற்குமேல் உதாரன் என்ற மனிதன் மறைகிறான்; விழியால் பருகி, மனத்தால் உண்ணும் கலைஞன் தோன்றுகிறான். அதன்பிறகு 'மனிதப் பிறவி'க்கு வேலை இல்லை. 'வாணி அமைத்திட்டாள் நற்கவிதை' அந்தக் கவிதைத் தரிசனம் மன்பதைக்குக் கிடைக்க வேண்டுமே! அந்த நிலையில் - வெறும் ஒரு கருவியாக உதாரன் சொற்களை 'மழைபோற் பெய்தான்' மண்ணுலக மானுடமும் கலையுலக மாந்திரிகமும் செய்துகொள்ளும் ஒருவகை உடன்படிக்கைக் கல(வி)வையிலே கவிதை பிறக்கிறது.

இதே அனுபவத்தைத்தான் தில்லையம்பலத்திலே கூத்தப்பிரானைக் கண்ட சுந்தரரிடமும் கண்டு அனுபவிக்க முயலவேண்டும். ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள என்ற சேக்கிழார் வாக்கிலே நம்பியாரூரனின் அனுபவம் பேசப்படுகிறது. சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், சுந்தரர் பெற்ற அனுபவமும் கவிதை வழங்கும் கவிஞனின் படைப்பனுபவமும் ஒன்றே எனலாம்.

கவிஞனுடைய இரட்டை நிலையை மண்ணுலகச் சார்பு பெற்று, அதன் வீறு ஓங்கி, தெய்வ தரிசனம் பெற்றுக் கவிதை பொழியும் இரட்டை நிலையைக் கவிஞர் வைரமுத்து 'பாரதிதாசன் ஒரு பார்வை' என்ற கவிதையிலே நமக்குக் காட்டுகிறார்.

கவிஞன்
உருவாக்கப்படுவதில்லை
காரணம்....
அவன்
களிமண் பொம்மையில்லை

கவிஞன் பிறப்பதுமில்லை
ஏனெனில்
எந்தக் கருப்பையும்
அவனை
அசுத்தப்படுத்திவிட முடியாது

அவன்
தோன்றுகிறான்
தன்னிலிருந்து இன்னொன்றாய்
தானே தோன்றுகிறான்

ஆமாம், ஊன்று களத்துக்குத் 'தான்' என்ற மானுடம் தேவைப்படுகிறது. ஆனால், உருவாக்கவோ, பிறக்கவோ வாய்ப்பில்லை. தன்னிலிருந்து இன்னொன்றாய்த்தானே தோன்றுகிறான்.

மற்றொன்றையும் நாம் அறிந்துகொள்ள வேண்டும். உருவாக்கப்படும் பொம்மைக்கு முதற்பொருளாக உள்ள களிமண்ணைக் கொண்டு முதலில் செய்த பொம்மையின் உருவத்தை மாற்றிவிடமுடியும். பிறந்தால், இறப்பும் உண்டு. ஆனால், தன்னிலிருந்து தானே தோன்றுகிறவன் கவிஞன்; தன்னிலிருந்து தானே இன்னொன்றாய்த் தோன்றுகிறான். எனவே, அவனுக்கு மரணம் இல்லை. ஒரு காலத்தில் கபிலன்; இன்னொரு காலத்தில் கம்பன்; பிறிதொரு காலத்தில் பாரதி; மற்றொரு சமயத்தில் பாரதிதாசன்...... ஆம், கவிஞனுக்கு மரணமில்லை. மரணத்தைப் போலவே என் எழுத்தும் நிலையானது (வைரமுத்து

கவிதைகள்: பக். 222). உண்மைக்கு அழிவில்லை; கவிதைக்கும் அதனை வழங்கும் கவிஞனுக்கும் அழிவில்லை.

எனக்குக் கவசம்
என்
எழுத்தின் நிஜம்
– – –
என்னைப்
புதைத்தாலும் நான்
முளைத்து விடுவேன்

என்னை
எரித்தாலும்
ஃபீனிக்ஸ் பறவையைப் போல்
உயிர்த்துவிடுவேன்

(ஷ. பக். 220)

எப்படிக் கவிஞனுக்கு இது கைகூடுகிறது?

என் பாஷையை
அலைகளுக்குச்
சொல்லிக் கொடுத்துவிட்டுச்
சாவேன்

என் கவிதைகளைப்
பூக்களுக்குச்
சொல்லிக் கொடுத்துவிட்டுப்
போவேன்

அலைகள் ஓய்வதில்லை; மலர்கள் மலர்ந்து கொண்டேயிருக்கும். மனிதன் மறையலாம். அவனுள் இருக்கும் கவிஞன்/கவிதை மறைவதில்லை.

என் மௌனத்தைக் கிள்ளாதீர்கள்
நிலவைக் கிள்ளிப்
பிறையாக்கிவிடலாம் என்று
பிழை செய்யாதீர்கள் (ஷபர்.223)

அப்படித் தவறு செய்தால் செய்தவர்க்குத் தோல்வி; கவிதைக்குப் புதுமணத்தோடு புகழ் வாகை 'சில நூற்றாண்டுகளுக்குத் தேவையான மையைத் தன் சின்னப் பேனாவில் சேமித்திருப்பவன்' கவிஞன் (ஷ). சில நூற்றாண்டுகளுக்குப்பின் தோன்றும் கவிஞன் அதற்குப் பின் சில நூற்றாண்டுகளுக்குத் தேவையான மையைத் தன் சின்னப் பேனாவில் சேமித்திடுவான்... அப்படியே நூற்றாண்டுக்கணக்கில் காலம் விரியும்; கவிதையும் விரியும் ஆம், கவிஞர் சொல்கிறார்.

என் எழுத்துக்கு
மரணமில்லை (ஷ பக்.222)

மரணமிலாப் பெருவாழ்வு வாய்க்கப் பெற்றது கவிதை. சரி; நல்லது. ஆனால், எது கவிதை என்று தெரிந்தால் போதுமா? எதற்குக் கவிதை என்றும் தெரிந்து கொள்ளவேண்டுமல்லவா?

கலை என்பது இன்பக் களஞ்சியம்; ஆகையால் சுவைத்து மகிழ்வதற்கே கவிதை. இது ரசனைப் பசியுள்ளவர்களின் கருத்து.

நாரியிடப் பாகருக்கு
நஞ்சளித்த பாவியென்று
வாரியிடம் போகாத
வையை....

ஆகா! என்ன சுகமான கற்பனை! வையையாறு கடலிலே கலப்பதில்லை. கடலை நதிகளின் கணவன் என்று சொல்வது ஒரு மரபு. வையை என்ற பொய்யாக் குலக்கொடி, இந்த மாப்பிள்ளை எனக்கு வேண்டாம் என்று மறுத்து, நின்றுவிட்டாளாம் ஏன்? இந்தக் கடல்தானே என் தந்தையாகிய மாதொரு பாகருக்கு நஞ்சு கொடுத்தது! இந்தப் படுபாவியா

எனக்குக் கணவன்? வேண்டவே வேண்டாம். இப்படித் தடை சொல்லி வைகை கடலொடு கலக்க மறுத்துவிட்டதாம். நிலவியல் படியும் பாண்டி மன்னர்களின் நீர்ப்பாசன நிர்வாக ஏற்பாட்டின்படியும் வைகையாற்று நீர் வீணாகக் கடலிற் கலப்பதில்லை. இந்தப் பௌதீக உண்மைக்குக் கற்பனை முலாம் பூசியவர் கவிஞர். நீர் நிர்வாகம் உண்மை, பௌதீக உண்மை அதைவிடக் கவிஞர் கற்பித்துச் சொன்ன காரணம் நயமாக இருக்கிறது. சுவைஞன் உள்ளம் கற்பனைக் களமாகவுள்ள கவிதையை அனுபவித்து மகிழ்கிறது.

கவிஞர் வைரமுத்துவின் கவிதைகளிலும் இப்படிச் சுவைக்கு இடம் தருகிற கற்பனைகள் உண்டு.

சில வகைகளில் ஐந்தறிவே கொண்ட சிற்றுயிர்களின் வாழ்க்கை ஆறறிவுடைய மனிதனைவிடச் சிறப்புடையதாக இருப்பதைக் காணமுடிகிறது. மனிதன் செத்தால் அவன் உடம்பு எதற்கும் ஆவதில்லை. விலங்குகள் வாழும்போதும் சாகும்போதும் பயனுடையவையாக உள்ளன.

மரணம் நிஜம்
மாண்டால்
மானின் தோல் ஆசனம்
மயிலின் தோகை விசிறி
யானையின் பல் அலங்காரம்
ஒட்டகத்தின் எலும்பு ஆபரணம்

நீ மாண்டால்.....
சிலரை
நெருப்பே நிராகரிக்கும்
என்பதால்தானே
புதைக்கப் பழகினோம்.

ஒன்று கேட்கிறேன்
எல்லா விலங்கும்

மனிதனுக்குப் பாலூட்டும்

எவளேனும் ஒரு தாய்
விலங்குக்குப் பாலூட்டியதுண்டோ?

சீ மிருகமே
என்று
மனிதனைத் திட்டாதே
மனிதனே

கொஞ்சம் பொறு
காட்டுக்குள் என்ன சத்தம்..........

ஏதோ ஒரு மிருகம்
இன்னொரு மிருகத்தை ஏசுகிறது
"சீ மனிதனே"

(வைரமுத்து கவிதைகள் பக். 448 - 9)

மாநிலம் பயனுற வாழ்வதற்கே வரம் கேட்டு வாழ்பவனே மனிதன் எனத் தக்கவன். 'உயிர்களிடத்தில் அன்பு வேணும்' என்றார் பாரதியார் அன்பிலார்க்கு (வெறும்) என்பு தோல் போர்த்த உடம்பு என்று பழித்தார் வள்ளுவப் பேராசான்

இந்த வாழ்வியல் உண்மையை வாய்(ப்)பாடுபோல சொல்லிவிடாமல், கற்பனை நாடகம் ஒன்றை படைத்துச் சுவைக்கச் செய்கிறார் வைரமுத்து. கவிதைக்கு 'ஐந்து பெரிது ஆறு சிறிது' என்று தலைப்புத் தந்து (ஷ 445) சுவைத்திறத்தை மிகுதிப்படுத்தவும் செய்கிறார்.

நியூயார்க்கில் உள்ள விண்ணளாவிய கட்டிடங்களை விஞ்ஞான விரல்கள் (427) என்று சொல்லும்போது 'ரசனை'க்கு இரைபோடுகிறார் கவிஞர். மௌன பூகம்பம் (282) அமுதத்தில் விஷம் (294), மௌனம் பேசுகிறது (336), ஊமைப் புலம்பல் (349) என முரண்பட்ட சொல்லாட்சிகளாலும் ஒரு வகைக் கற்பனை மயக்கத்தில் ஆழ்த்தி, அழகனுபவத்தில் நம்மை மகிழ்விக்கிறார்.

**இப்படியே 'கற்புள்ள கருவாடு' (457) என்ற உருக்காட்சியால் (இமேஜரி) திளைப்பூட்டும் அனுபவங்களும் வைரமுத்து கவிதைகளில் மிகப்பலவாகும்.**

இத்தகைய சொல்லாட்சிகளும் உருக்காட்சிகளும் கவிதைக்கு பொலிவு ஊட்டுவன; ஐயமே இல்லை. இவை இல்லையென்றால் தத்துவ சாத்திரங்களுக்குச் சிவஞான முனிவர் அருளிய மாபாடிய உரைநடைக்கும் கவிதைக்கும் வேற்றுமை இராது.

ஆனால்..........

கவிதையின் உயிர் இதுவாக இருக்க முடியாது. "கலை என்பது ஒழுக்க நெறியில் ஓர் எட்டாவது மனிதனை முன்னேற்றுவதாக இருக்கவேண்டும். நோக்கிலே உயர்வடையச் செய்யவேண்டும். ஒழுக்கத்தினின்றும் வழுக்கிவிழச் செய்யுமாயின் அது கலையாகாது, ஆபாசம் என்றே கொள்ளப்படும்" - இது காந்தியடிகள் கலைபற்றித் தெரிவித்த கருத்து. (Collected works vol VI P.P. 292 - 3)

சினிமா என்னும் இந்த
ராட்சச இருட்டின்
கைகளைப் பிடித்துக்கொண்டு
இன்னும் நாம் நடப்பது
எத்தனை தூரம்?
இரவில் வெளிச்சம் காட்டிப்
பகலை இருட்டாக்கிவிடும் பகட்டு இது
(வை. பக்.231, 234)

**திரைப்படத் துறையில் தலைமைப் பேறு பெற்றிருக்கும் கவிஞர் வைரமுத்துவுக்குத் திரைக் 'கலை' மக்களை எப்படிக் கெடுக்கிறது என்பது தெரியும். இந்த 'அழுக்குத்திரை'யின் ஆபாசத்தையும், நெறியைக் கெடுக்கும் போக்கையும் பொறுக்கமுடியாத கவிஞர்.**

இளைஞர்களின் கைகளிலேனும்
இந்த அழுக்குத் திரை
சலவை செய்யப்படுமா ?
சற்றுப் பொறுத்திருப்போம்

இல்லையெனில்.....
மக்களைச் சுருளவைக்கும்
திரைப்படச் சுருளையெல்லாம்

ஒரு
தீக்குச்சிக்குத் தின்னக் கொடுப்போம்
(வை.235)

பொதுவாகக் கலையின்/கவிதையின் நோக்கம் என்ன என்பதைக் கவிஞர் வைரமுத்துவின் இந்தக் கவிதை வரிகள் தெளிவுறுத்தும். கவிதை எதற்காக என்பதை மிகத் தெளிவாக அவரே இன்னொரு பாட்டில் வெளிப்படையாகச் சொல்லியிருப்பதைச் சுட்டி, இக்கட்டுரையை முடிப்போம்.

போதை தரவன்று புதிய விடியலுக்குப்
பாதையிட வல்லதே பாட்டு.

## செந்தமிழ் ஆசிரியர் குழு

பதிப்பாசிரியர். இரா.சதாசிவம்
பேராசிரியர். நா. பாலுசாமி
பேராசிரியர். தமிழண்ணல்
பேராசிரியர். சுப. அண்ணாமலை
பேராசிரியர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேராசிரியர். ம.ரா.போ. குருசாமி
பேராசிரியர். கதிர். மகாதேவன்
பேராசிரியர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேராசிரியர். அ. தட்சிணாமூர்த்தி
பேராசிரியர். ந. வாசுகிராஜா
பேராசிரியர். இ.கி. இராமசாமி
பேராசிரியர். சே. அரிராமநாதன்
திரு. வே. திருவரங்கராசன்

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, மதுரை-20. ✆2532879

அன்பு அச்சகம், மதுரை-1. ✆2341116